REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 நவம்பர் 3 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 260 | Thursday 03, November, 2022 | 16 பக்கங்கள் | 50/-

MOBILE
TALK TEXT DATA
BOOSTER 529
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
குரியவற்றை BOOST செய்யுங்கள்
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு 1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு 1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
மேலதிக டேட்டாவையும் செயற்படுத்திடலாம்.
TRC/M/PRO/22/03
SLTMOBITEL

வரவு - செலவுத்திட்ட ஆவணம் தயாரிக்கும் பணிகள் மும்முரம்

அமைச்சர்கள், அரச அதிகாரிகள் பங்களிப்பை வழங்கவும்

அனைத்து தரப்பினரிடமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

வரவு செலவுத் திட்ட ஆவணம் தற்போது தயாரிக்கப் பட்டு வருவதால் அமைச்சர்கள், இராஜாங்க அமைச் சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் 06

கொரியாவில் இலங்கையருக்கு அதிக வேலைவாய்ப்பு:

முக்கிய பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் மனுஷ கொரியா விஜயம்

லோரன்ஸ் செல்வநாயகம்

தென் கொரியாவில் இலங் கையருக்கு அதிக வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில், முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத் துவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச் சர் மனுஷ நாணயக்கார நேற்று கொரி யாவுக்கு பயணமானார்.

கொரியாவில் தற்போது தொழில்புரியும் இளைஞர்க ளின் கோரிக்கைகள் தொடர் பில் கொரிய அரசாங்க அதி காரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் இந்த விஜயத் தின் முக்கிய நோக்கமென்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். அத்துடன், புதிய வேலை வாய்ப்புக்களை தென்கொரியா வில் பெற்றுக்கொள்ளும் 06

வடக்கில் சுமார் 1,000 ஏக்கரில் சரணாலயம் அமைக்க திட்டம்

நிலத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி பணிப்பு

வடமாகாணத்தில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் சரணாலயமொன்றை அமைப் பதற்கு பொருத்தமான நிலத்தை அடையா ளம் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். வடமாகா ணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், சரணாலயங்கள் மற்றும் மிருகக் காட்சிசாலைகளை பார்வையிட தெற்குக்கு வர வேண்டிய சூழல் காணப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், பொருத்தமான காணிகளை ஆராயுமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீரவும் அறிவித் துள்ளார்.

அமைச்சரவை உபகுழு கூட்டத்தில் பிரஸ்தாபித்ததன் எதிரொலி

பருவ மழைக்காலம் முடிந்ததும் வலி.வடக்கு காணிகள் விடுவிப்பு

ஜனாதிபதி உறுதியளித்துள்ளதுடன் நேரடியாக விஜயம் செய்வாரென்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

பருவமழைக்காலம் நிறைவடைந்ததும், யாழ். வலிகாமம், வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் தீர்க்கமான முடி வெடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று தெரிவித்துள் ளார். வலிகாமம், வடக்கு, மயிலிட்டி துறை முகத்துக்கு நேற்று (02) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அங்கு கடற் றொழிலாளர்களுடன் சந்திப்பிலும் கலந்து கொண்டார். இதன்போதே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார். 06

அமெரிக்கா அன்பளிப்பு செய்த

ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

இலங்கை கடற்படைக்கு, அமெ ரிக்கா அன்பளிப்புச்செய்த P627 ஆழ் கடல் ஊடுருவல் கப்பல் நேற்றுக் (02) காலை கொழும்பு துறைமு கத்தை வந்தடைந்தது. 2021ஆம் ஆண்டு 06

நடைமுறைச் சட்ட கட்டமைப்புக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடத்த தயார்

தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு 03

அரச நிறுவனங்களிடமிருந்தும் தாமத கட்டணம் அறவிட முடிவு

விரைவில் சுற்றறிக்கை வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

நீர்க் கட்டணத்தை தாமதமாக செலுத்தும் அரச நிறுவனங்களிடமிருந்தும் எதிர்காலத்தில் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு தீர்மா னித்துள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் இந்த தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் அந்த சபையின் உயரதிகாரியொருவர் தெரி வித்துள்ளார். 06

நச்சுப் புகை சுவாசித்ததால்

பாணந்துறை பாடசாலையொன்றின் மாணவர்கள் 50 பேர் ஆஸ்பத்திரியில்

லோரன்ஸ் செல்வநாயகம், மொரட்டுவை மத்திய விசேட நிருபர்

பாணந்துறையிலுள்ள பிரதான பாடசாலையொன்றின் மாணவர்கள் 50 பேர் நச்சுப்புகையை சுவாசித்ததால், திடீர் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. பாணந்துறை நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் 50 பேரே இவ்வாறு நச்சுப் புகையை சுவாசித்ததில் பாதிப்புக்குள்ளாகினர்.

பாடசாலைக்கருகில் வீடொன்றிலோ அல்லது 06

பிரியமாலி, சிறிசுமன தேரர் உள்ளிட்ட நால்வருக்கு 16 வரை விளக்கமறியல்

கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பிரபல வர்த்த கர்கள் மற்றும் பல்வேறு நபர்களிடமிருந்து, மில்லி யன் கணக்கான நிதியை மோசடி செய்துள்ளாரென்ற குற்றச்சாட்டின் பேரில் சிறை யிலடைக்கப்பட்டுள்ள திக்கோ குரூப் நிறுவனத்தின் உரிமையாளர் திலினி பிரியமாலி உள்ளிட்ட 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:

ரிஷாட் பதியுதீன் எம்.பி வழக்கிலிருந்து விடுவிப்பு

கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபராகக் கருதப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நேற்று வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

சட்ட மாஅதிபரின் பணிப்புரையின்படி 06

அரசின் நிதிக் கொள்கையின்படி

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை படிப்படியாகக் குறைக்க முடியும்

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் நடைமுறைப்படுத்திவரும் நிதிக் கொள்கையின்படி கட்டம், கட் டமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு எதிர்பார்த் துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத் துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், பணவீக்கம் குறைவடைவதால் மாத்திரம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை 06

பாப்பரசர் 01ஆம் பிரான்சிஸ் இன்று பஹ்ரெய்ன் விஜயம்

பாப்பரசர் முதலாம் பிரான் சிஸ், பஹ்ரெய்னுக்கு இன்று (03) விஜயம் செய்கிறார். மத்திய கிழக்கு நாடான பஹ் ரெய்னுக்கு பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்யவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இன்று வியாழக்கிழமை (03) முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கி ழமை வரை அவர் பஹ்ரெய்னில் தங்கியிருப்பாரென வத் திகான் அறிவித்துள்ளது.

சிவில் மற்றும் திருச்சபை அமைப்புகளின் அழைப்பை ஏற்று பஹ்ரெய்னுக்கு பாப்பரசர் விஜயம் செய்ய வுள்ளார். தலைநகர் மனாமா மற்றும் 06

ஹற்றன் -கண்டி பிரதான வீதியில்

இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

நாவலப்பிட்டியில் சம்பவம்; 10 பேர் காயம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

நாவலப்பிட்டி மீபிட்டிய பிரதேசத்தில் தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் பாடசாலை மாணவர்கள் உட்பட 10 பேர் காயமடைந்தனர்.

ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் நாவலப்பிட்டி மீபிட் டிய பிரதேசத்தில் நேற்றுக் (02) காலை 7.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றது.

ஹற்றனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் கண்டியிலிருந்து ஹற்றன் நோக்கி பய ணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதின. 06

முட்டையின் விலையை 07 அல்லது 10 ரூபாவால் குறைக்க முடியும்

முட்டை வர்த்தகர்கள் சங்கம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முட்டையின் விலையை பத்து ரூபாவால் குறைக்க முடியும், எனினும் வர்த்தகர்கள் முட்டையை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்வதாக அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் செய லாளர் அனுர மாரசிங்க தெரி வித்துள்ளார். 06

அதிதுரித
Dialog HOME BROADBAND இடமிருந்து
வீட்டிற்கு Wi-Fi ரீலோட்
வீட்டிற்கு Wi-Fi RELOAD
புதியது மாதத்திற்கு 20GB ரூ.540/-
2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-
இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-
செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.

மலையக மக்கள் நலனுக்காக

ஏனைய அரசியல் தரப்புகளுடன் புரிந்துணர்வுடன் செயற்பட தயார்

மலையக மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன் புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுவதற்கு தயாராக உள்ளேன் என தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் பங்கேற்குமாறு மலையக அரசியல் கட்சிகளும், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களும் மனமுவந்து எனக்கு அழைப்பு விடுத்ததால் அதில் பங்கேற்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

மலையகக் கட்சிகள் வெறுப்பு அரசியலுடன் தொடர்ந்தும் பயணம் செய்வது உகந்ததல்ல! எமது மக்களின் நலனுக்காக அரசியலுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட வேண்டியது அவசியம் எனவும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டு நான் அங்கு சென்றமை குறித்து பலருக்கு பலவித வேறுபட்ட உணர்வுகள் இருக்கலாம். ஆனால் எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம் என்பதை நாம் மறக்கலாகாது. அதற்கான ஆரம்பமே இதுவாகும்.

நான் சஜித் பிரேமதாச மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்வதற்காக அந்நிகழ்வில் கலந்துக்கொள்ளவில்லை, மாறாக புரிந்துணர்வுடன் கூடிய மலையக அரசியல் ஒருமைப்பாட்டுக்காகவே கலந்துக்கொண்டேன் என்பதை ஆணித்தரமாக இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன். அதேநேரத்தில் வெறுப்பையும், எதிர்ப்பையும் வைத்து கொண்டு இனிமேலும் அரசியல் செய்ய முடியாது. அவ்வாறான பிளவு கொண்ட அரசியல் போக்கில் நாம் நீடித்துச் செல்ல முடியாது என்பது எனது குறுகிய கால அரசியல் வாழ்வில் நான் கற்றுக் கொண்ட அனுபவம் ஆகும்.

ஆகையால் அன்பினாலும் நல்லிணக்கப்பாட்டினாலுமே எமது மக்களுக்கான நன்மைகளை சாத்தியப்படுத்த நாமனைவரும் பயணிக்க வேண்டும்.

அன்று அந்த நிகழ்வின் சந்திப்பின் போது மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் ரீதியாக ஒற்றுமை இல்லாவிட்டாலும் கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அவ்வாறே இ.தொ.காவின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் மலையக மக்களின் நலன் சார்ந்த எல்லா விடயங்களிலும் இணக்கப்பாட்டுடன் பயணிக்க நான் தயாராகவுள்ளேன்.

அதேபோன்று மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும் பட்சத்தில், நாம் அவர்களோடு முட்டிமோதிக் கொள்ளாமல் ஆரோக்கியமான முறையில் எங்கள் வழியில் பயணிப்போம் .

அத்தோடு நான் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமை காரியாலய திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டமையானது கட்சி பேதமின்றி அனைத்து இளைஞர் மத்தியிலும் வரவேற்பையும், நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

ஆகவே இளைஞர்கள் இவ்விடயத்தை ,அரசியல் எதிர்காலத்தை மனதில் கொண்டு நல்லெண்ணத்துடன் எமது மக்கள் மத்தியில் கொண்டு செல்வீர்கள் என நம்புகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

கண்டி-அக்குறணை நகரை அண்மித்து ஓடும் பிங்காஓயாவில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தும் முகமாக அக்குறணை பிரதேச சபை மற்றும் அக்குறணை பிரதேச செயலகம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் சேற்று மண் மற்றும் மணல் அகற்றும் வேலைத்திட்டத்தை பிரதமர் தினேஷ் குணவர்தன நேரில் வருகை தந்து (29) பார்வையிட்டார் இதன்போது கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், அக்குறணை பிரதேச செயலாளர் இந்திகா அபேசிங்க, அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணாதிலக ராஜபக்ச, அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (படம்: பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

இராகலையில் இன்று உலர் உணவு வழங்கும் நிகழ்வு

ஜப்பான் அரசாங்க உதவி ஊடாக முன்னெடுக்கப்படும் உலக உணவு திட்டத்தின் கீழ் வலப்பனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெருந்தோட்ட மக்கள் மற்றும் கிராம மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு வழங்கும் நிகழ்வு இராகலையில் இன்று (03) காலை இடம்பெறவுள்ளது.

வலப்பனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்ப வருமானம் குறைந்த 4000 குடும்பங்களுக்கு உலக உணவு திட்டம் ஊடாக அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் வழங்க அண்மையில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் இராகலை தோட்டத்தில் முதல் முறையாக இந்த உலர் உணவு வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஆ.ர மேஸ்.)

அக்கரபத்தனையில் தோட்ட மக்களுக்கு இலவச ஆயுர்வேத மருந்து பொருட்கள்

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்டப்புற பகுதிகளில் இலவச ஆயுர்வேத மருந்து பொருட்களை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்கான கலந்துரையாடலொன்றும் அக்கரப்பத்தனை பிரதேச சபை தலைவர் இராமன் கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

மெரெயா ஆயுர்வேத வைத்தியசாலையில் கடைமைபுரியும் வைத்திய அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலே இவ்விடயம் முன்வைக்கப்பட்டது. இதன்போது அக்கரபத்தனை பிரதேச சபையை கொண்ட தோட்டப்பகுதிகளில் தொற்று நோய்கள் அதிகமாக காணப்படுவதாகவும் அதேநேரத்தில் நுளம்புகளினால் அதிக நோய்பரவல்கள் ஏற்படுவதாகவும் அவ்வாறான பகுதிகளை இனங்கண்டு அவர்களுக்கு ஆயுர்வேத மருந்து பொருட்களை விநியோகத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உபத்தலைவர் சச்சுதானந்தன் கலந்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நீலமேகம் பிரசாந்த்)

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதி - இதொகா சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிக்கும், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மூத்த சமூகப் பாதுகாப்பு நிபுணர் மரிக்கோ ஓச் (Mariko Ouch) இடையிலான கலந்துரையாடல் சௌமிய பவனில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தொழிலாளர் நலன் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

தனியார் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கான உரிமைகள் வழங்கப்படாமல் அடிமைத்தனப்படுத்துவது தொடர்பாக இதன்போது இ.தொ.கா சுட்டிக்காட்டியது.

இது குறித்து சர்வதேச தொழிலாளர் அமைப்பு கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு துப்பாக்கி மீட்பு

கம்பளை நிருபர்

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொலஸ்பாகை மல்கொல்ல பகுதியில் நபர் ஒருவரிடமிருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறுந்துவத்த பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அந்நபரை கைதுசெய்துள்ளனர்.

30 வயதான அந்நபரை கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய குறுந்துவத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்,

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை;

தெஹியோவிட்டவில் பிராந்திய அலுவலகம்

புலத்கொஹுபிட்டிய குறூப் நிருபர்

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் கேகாலை மாவட்ட பிராந்திய அலுவலகம் நேற்று முன்தினம் தெஹியோவிட்ட, ஈரியகொல்ல பிரதேசத்தில் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவினால் திறந்து வைக்கப்பட்டது.

கேகாலை பிரதேசத்தில் உள்ள சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமையவே இந்த புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் சுமார் 37 ஆயிரம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் உள்ளனர். அவர்களில் சுமார் 20 ஆயிரம் பேர் யட்டியந்தோட்டை, தெரணியகலை, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல மற்றும் புலத்கொஹுபிட்டிய பிரதேசத்தில் உள்ளனர். மேலும், கேகாலை மாவட்டத்தில் 16 ஆயிரம் ஹெக்டேயர் தேயிலை மட்டுமே பயிரிடப்படுகிறது.

தெஹியோவிட்ட பிரதேசத்தில் பிராந்திய அலுவலகம் திறக்கப்படுவதன் மூலம் கேகாலையில் அமைந்துள்ள அலுவலகம் உப அலுவலகமாக செயற்படவுள்ளது. தற்போது தெரணியகல பிரதேசத்திலும் சிறு தேயிலை அபிவிருத்தி அதிகார சபையின் உப அலுவலகம் உள்ளது.

இந் நிகழ்வில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜிகா விக்கிரமசிங்க, சுதத் மஞ்சுள, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி துஷார பிரியதர்ஷன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு; ஊவா மாணவர்கள் கௌரவிப்பு

பதுளை தினகரன் நிருபர்

ஊவா மாகாண பாடசாலைகளில் க பொ த உயர்தர பரீட்சையில் கலை,வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் கணித பிரிவுகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற சுமார் 300 மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பதுளை ஊவா மாகாண நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக சிவில் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்து சிறப்பித்தார். கௌரவ விசேட அதிதிகளாக ஊவா மாகாண கல்வி உயர் அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் உள்ளிட்ட கல்வியியலாளர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வலைய மட்டத்தில் உயர்தர விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வளர்ந்து வரும் சிறந்த பாடசாலைக்கான சிறப்பு விருதினை பதுளை அல் அதான் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. அத்துடன் பதுளை மத்திய மகா வித்தியாலயமும் சிறப்பு தேசிய பாடசாலை விருதினை பெற்றுக்கொண்டது .

கலைப்பிரிவில் 3ஏ பெற்று சாதனை படைத்த மாணவி ரிஸ்லா அக்ஷ்ரஃப் மற்றும் 300 மாணவ மாணவிகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அல் அதானுக்கான விருதினை அதிபர் எம்.எஸ் .எம். ஸரூக் பெற்றுக்கொண்டார். கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித பிரிவுகளில் 75 வீதத்திலும் அதிகமான பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுள் கலை பிரிவில் 3ஏ சித்தியைப் பெற்று சட்ட பீடத்திற்கு ஒரு மாணவியும் மருத்துவ பீடத்திற்கு, இரு மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான சாமிமலை மல்லியப்பூ தோட்டத்தில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது.

நேற்று காலை ஹற்றன் தொழில் ஆணையாளர் நாயகம் முன்னிலையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மாவட்ட தொழில் உறவு அதிகாரி மற்றும் தோட்ட முகாமைத்துவ அதிகாரிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில், தோட்டத்தில் காடாக்கிய பகுதிகள் இனிவரும் காலங்களில் துப்புரவு செய்து தேயிலை தளிர் பறித்தல், நாளாந்தம் பறிக்கவேண்டிய கொழுந்து 16 கிலோ எனவும் தற்போது உள்ள முகாமையாளர் இரண்டு மாதங்களின் பின்னர் வெளியேற வேண்டும் எனவும் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டது.

வெடிபொருட்கள் வைத்திருந்தவர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சட்ட விரோதமான முறையில் வெடி பொருட்களை தன்வசம் வைத்திருந்த 34 வயதான நபர் ஒருவரை கஹவத்தை விசேட அதிரடி படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து பலாங்கொடை தாமஹன பிரதேசத்தை சேர்ந்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார். தனியார் கட்டிட நிர்மாண நிறுவனமொன்றின் உரிமையாரான இவர் தனது பண்டகசாலையில் பாதுகாப்பற்ற முறையில் வெடிபொருட்களை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அவரிடமிருந்து ஜெனரேட்டர் 2, டெட் ட்டனேட்டர் 435, வெடிபொருட்கள் 1450, ஜெலட்நைட் குச்சிகள் 80 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பலாங்கொடை பொலீசாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 3 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
01 முதல் 07 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.51
இஷா - 07.03

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஐப்பசி 17
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: மரண சித்தயோகம்
திதி: தசமி

ஓமான் அரசாங்கம் ரூ.191 மில்லியன் பெறுமதியான மருந்துகள் அன்பளிப்பு

அமைச்சர் கெஹெலியவிடம் தூதுவர் கையளிப்பு

ஓமான் அரசாங்கம், இலங்கைக்கு 191 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உதவிகளை அண்மையில் வழங்கியது. சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் சுகாதார அமைச்சில் வைத்து இது கையளிக்கப்பட்டது.

இவற்றில் இருதய நோய், உயர் ரத்த அழுத்தம், மூட்டு வலி, ஹார்மோன் சமநிலையின்மை, மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட புற்று நோய்கள், நரம்பியல் நோய்களுக்கு பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மருந்துகள் என்பன அடங்குகின்றன.

இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது.

இதனால், மருந்துக்கும் தட்டுப்பாடு காணப்படுகிறது. ஆனாலும் சுகாதார துறையில் குறிப்பிட்ட அதிகாரிகள் நிலைமையை முகாமைத்துவம் செய்து, சுமுக நிலையை கொண்டுவர பெரும் முயற்சி எடுத்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வேளையில், பல நாடுகளிலிருந்து கிடைக்கும் 06

மூன்று மொழிகளிலும் சட்டக்கல்லூரி பிரவேச பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தலையிடுமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சட்டக் கல்லூரி மாணவர்கள் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

பத்து மாதங்களில் 5,68,000 சுற்றுலா பயணிகள் வருகை

இவ்வருடம் 1.8 பில். டொலர் வருவாய் எதிர்பார்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்கம் முன்னெடுத்துள்ள விஷேட வேலைத்திட்டங்களின் பயனாக, நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றுலா பயணிகளுக்கான தரவுகள் தெரிவிக்கின்றன.

ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 42,000 சுற்றுலா பயணிகள் பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அந்தத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 5,68,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அதேவேளை இந்த வருடத்தின் இறுதிக்குள் ஒரு மில்லியன் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகைதருவதற்கான நடவடிக்கைகளை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

அந்த செயற்றிட்டம் வெற்றியளிக்குமானால் சுற்றுலாத் துறை கைத்தொழில் இந்த வருடத்தில் 1.8 பில்லியன் டொலர்களை வருமானமாக பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அந்த தரவுகள் தெரிவிக்கின்றன.

பயிற்றுவிப்பாளரால் 06 சிறுமிகள் துஷ்பிரயோகம்

பொலிஸார் வலைவீச்சு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கெக்கிராவ பிரதேசத்திலுள்ள பிரதான பாடசாலையொன்றின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவர் 06 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக கெக்கிராவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகத்திற்குரிய விளையாட்டு பயிற்றுவிப்பாளரை கைது செய்ய கெக்கிராவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இப்பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் 14 மற்றும் 16 வயதுடைய 06 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்ததாக, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கெக்கிராவ பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொதுமன்னிப்பில் விடுதலையான அரசியல் கைதிகளுக்கு இழப்பீடு

தேசிய சமாதான பேரவை அரசிடம் வலியுறுத்து

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென, தேசிய சமாதான பேரவை வலியுறுத்தியுள்ளது.

விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் சிலர் தமது தண்டனை காலத்துக்கு மேலாக பல வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்ததால், அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென தேசிய சமாதான பேரவை வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், அரசியல் கைதிகள் 08 பேர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் மூன்று பேர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை படுகொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டின் பேரில் தண்டனை அனுபவித்து வந்தவர்களாவர்.

இந்தக் குண்டுத்தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தமது கண்பார்வையை இழந்தார். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பின் கீழ் அவர்களை விடுவிப்பதற்கு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தமது சம்மதத்தை வெளியிட்டார்.

இதன்மூலம், சித்திரவதைக்குள்ளாகி பிளவுபட்டுள்ள எமது நாட்டின் மக்கள், மீண்டெழத் தேவையான பெருந்தன்மையை முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க நிரூபித்துள்ளாரென தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், விடுவிக்கப்பட்ட எட்டு கைதிகளில் நால்வர் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை விட, நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்பதை ஜனாதிபதி செயலகம் ஒப்புக்கொண்டுள்ளதாக தேசிய சமாதான பேரவை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. விடுவிக்கப்பட்ட மூன்று கைதிகளுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர்கள் 22 ஆண்டுகள் சிறைத்தண்டனையை பெற்றிருந்தனர்.

எனினும், மற்றுமொரு கைதிக்கு நீதிமன்றினால் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் 14 ஆண்டுகள் சிறைவாசம் இருந்துள்ளார். இன்னுமொருவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் 14 ஆண்டுகளை சிறையில் கழித்துள்ளார்.

அவ்வாறே, 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு கைதிகள், 14 ஆண்டுகள் சிறையிலிருந்துள்ளனர். இவர்களும் ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெற்றவர்களில் அடங்குவரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு, விவேகானந்தாவின் புத்தாக்கக் கண்காட்சி நாளை

கல்வி அமைச்சர் சுசில் பிரதம அதிதி

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் மாபெரும் புத்தாக்கக் கண்காட்சி நாளை (04) ஆம் திகதி முதல் (06) ஆம் திகதிவரை பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சி.ரவிச்சந்திரிக்கா தலைமையில் நடைபெறவுள்ள இக் கண்காட்சிக்கு, பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற 06

வசந்த முதலிகேவுக்கு தோல் நோய் பாதிப்பு

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளன ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே நேற்றுக் (02) காலை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே, தோல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு சிகிச்சையளிப்பதற்காகவே கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறைச் சட்ட கட்டமைப்புக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடத்த தயார்

தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட கட்டமைப்புக்குள் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்தத் தயாரென தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில், தேர்தல் நடத்துவதும் அபிவிருத்தியே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சிக்கல்கள் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைமுறை தொடர்பான பொதுமக்கள் 06

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்டுக்கு பதவியுயர்வு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் கெப்பித்திகொல்லாவ ரம்பகெப்புவெவ பகுதியில் இடம்பெற்ற அமைதியின்மையின் போது பிரதேச வாசிகளின் தாக்குதலில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட் அகம் பொடிகே சுனில் என்ற உத்தியோகத்தர் 31 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் விதத்தில் மேலதிக தகைமை திட்டத்தின் கீழ் பொலிஸ் மாஅதிபர் அவர்களினால் சார்ஜன்ட் பதவியில் இருந்து உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

இப்பதவியுயர்வு பொலிஸ் மா அதிபரின் வேண்டுகோளில் வழங்கப்பட்டுள்ளது. ரம்பகெப்புவெவ பகுதியில் 31 ஆம் திகதி காட்டுயானையின் தாக்குதலில் பிரதேச வாசி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து அங்கு குழுமிய கிராமவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அப்பகுதியில் பெரும் அமைதியின்மையினை ஏற்படுத்திய போது கெப்பித்தி கொல்லாவ பொலிஸ் நிலையத்தில் கடமை செய்து வந்த சார்ஜன்ட் (12601) அகம் பொடிகே 06

இ.தொ.கா தலைமைகளுடன் ஜப்பான் தூதுவர் சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயமான CLF யிற்கு ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் அவரது பாரியார் வருகை தந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்தனர்.

இதன்போது, மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடைய உருவப் படத்திற்கு இவர்கள் மாலையும் அணிவித்தனர்.

மறைந்த தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் காலந்தொட்டு, இன்றுவரை இ.தொ.காவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் நிலவும் நட்புறவு தொடர்பாகவும், இ.தொ.கா செய்து வரும் சேவைகள் குறித்தும் இதன் போது ஜப்பான் தூதுவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதப்பாண்டி ராமேஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கணகராஜ், மூத்த அரசியல்வாதி 06

இந்து கலாசார திணைக்கள புதிய பணிப்பாளருக்கு பாபு சர்மா வாழ்த்து

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பதவியேற்றுள்ள ய.அனிருத்தனனுக்கு ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் பணிப்பாளர், அ.உமாமகேஸ்வரன் கடந்த எட்டு வருடங்களாக பணிப்பாளராக கடமையாற்றி வடமாகாண சபைக்குப் பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். இதையடுத்தே ய.அனிருத்தனன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக, பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக, இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவின் பணிப்பாளராக பல்வேறு பதவிகளை அர்ப்பணிப்புடன் இவர் ஆற்றியவர். இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரி இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய பணிப்பாளரான இவரது பதவிக்காலத்தில், 06

இறக்குமதியாகும் சில பொருட்களுக்கு உச்ச சில்லறை விலை நிர்ணயிக்க முடிவு

வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியீடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்படும் சில பொருட்களுக்கு உச்ச சில்லறை விலையை நிர்ணயிக்க முடிவு செய்யும் வர்த்தமானி அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் இனிப்புப் பதார்த்தங்கள், சொக்லேட், பிஸ்கட், கேக் மற்றும் வாசனை சவர்க்காரங்கள் 06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	223.10	233.90
கனடியன் டொலர்	257.50	269.44
யூரோ	345.67	360.32
ஜப்பான் யென்	2.4481	2.5509
சிங்கப்பூர் டொலர்	247.77	258.33
ஸ்டேலிங் பவுன்ஸ்	394.42	410.24
சுவிஸ் பிராங்க்	355.17	372.22
அமெரிக்க டொலர்	359.23	369.96

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	961.64	கட்டார் ரியால்	99.31
குவைத் டினார்	1,168.79	சவூதி ரியால்	96.54
ஓமான் ரியால்	942.56	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	98.79

தினகரன்
THINAKARAN
வீரகேசரி
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 07

குறள் தரும் சிந்தனை

அழிவின்றி அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை

எந்த நிலையிலும் அழியாததும், சூழ்ச்சிக்கு இரையாகாததும், பரம்பரையாகவே பயமற்ற உறுதி உடையதும்தான் உண்மையான படை எனப்படும்.

பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளை சீர்குலைக்கும் வகையிலான ஆர்ப்பாட்டம்!

நாடு தற்போது தீவிர பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீட்சி பெற்று வருகின்றது. தீவிர பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட நிலைமை இன்றில்லை. பணவீக்கமும் கூட வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான சூழலில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளும் சில தொழிற்சங்கங்களும் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை முன்னெடுத்தன.

கொழும்பு, மருதானையில் இட்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் காரணமாக, வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதோடு பயணிகளும் கடும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர். நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று வரும் சூழலில் இவ்வாறான ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத விடயம் என்பதுதான் சமூக ஆர்வலர்களது அபிப்பிராயமாகும்.

'பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தினால் மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. நெருக்கடிகள்தான் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதுதான் உண்மை. வங்குரோத்து நிலைக்கு உள்ளாகி தீவிர பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு எவரும் முன்வராத சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்பொறுப்பை ஏற்றார். கடந்த காலங்களில் நாடு பொருளாதார ரீதியில் எதிர்கொண்ட நெருக்கடிகளை வெற்றிகரமாகக் கையாண்டு பெற்றுள்ள அனுபவங்களின் அடிப்படையில் அவர் இந்நெருக்கடியையும் அணுகியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு விரிவான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பிரதிபலன்களை மக்கள் அனுபவிக்கவும் ஆரம்பித்துள்ளனர். நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலை முடிவுக்கு வந்துள்ளதும் அதில் ஒரு பிரதிபலனேயாகும்.

தீவிர பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த போது மக்கள் முகம்கொடுத்த பொருளாதார பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. என்றாலும் இந்நெருக்கடிகளுக்கு தனித்து நின்று தீர்வு காண முடியாது. இதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்க வேண்டும். அது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை விரைவாகவும் வேகமாகவும் கட்டியெழுப்புவதற்கு பெரிதும் உதவும்.

இந்த நிலையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கான முயற்சிகளுக்கு இடையூறுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தவே செய்யும். அது நெருக்கடியை மீண்டும் தீவிர நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

குறிப்பாக உல்லாசப் பயணிகள் அதிகளவில் இந்நாட்டுக்கு வருகை தரும் காலப்பகுதியே இது. இக்காலப்பகுதியில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள், கடும் சிரமங்கள், அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள இயல்புநிலை குறித்து பிழையானதும் தவறானதுமான பார்வையை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு வழங்கும். இது இலங்கைக்கு வருகைதர ஏற்கனவே திட்டமிட்டுள்ள உல்லாச பயணிகள் வேறு நாடுகளுக்கு செல்லவும் கூட வித்திடலாம்.

மேலும் இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்களும் எட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் இன்று 03 ஆம் திகதி முக்கிய கலந்துரையாடலொன்றும் இடம் பெற உள்ளது.

இச்சூழலில்தான் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்ற சமயம் முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான ஆர்ப்பாட்டத்தினால் எட்டப்படவிருந்த இணக்கப்பாட்டில் தாமதங்களை ஏற்படுத்தியமை தெரிந்ததே.

அதேநேரம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ள விதம், காலகூழல் குறித்து மக்கள் மத்தியில் சந்தேகங்களும் எழுந்துள்ளன. பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீட்சி பெற்றுவரும் நாட்டை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் ஒரு முயற்சியாகவே இவ்வார்ப்பாட்டம் நோக்கப்படுகிறது.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் படை உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டன.

'படிப்படியாக ஸ்திர நிலையை அடைந்துவரும் நாட்டை மீண்டும் பின்னடைவுக்குள் தள்ளிவிடும் நடவடிக்கையாகவே இந்த ஆர்ப்பாட்டத்தை நோக்க வேண்டியுள்ளது' என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் மக்களும் அறியாதவர்கள் அல்லர். முற்றிலும் அற்ப அரசியல் இலாபம் பெறுவதை நோக்கக்காகக் கொண்டது என்பதுதான் இந்த ஆர்ப்பாட்டம் என்பதுதான் பல அரசியல் தலைவர்களின் கருத்து.

ஆனால் அற்ப நலன்களுக்கு அப்பால் பொருளாதார மீட்சிக்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

மனிதநேய ஒன்றிணைவு நிவாரணத் திட்டத்துடன் கைகோர்த்துள்ள London Stock Exchange குழுமம்

லயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியன கூட்டாக ஆரம்பித்த 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்தில் இணைந்து கொண்ட CBL குழுமம் Citi Bank, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Co மற்றும் Unilever ஆகிய பெருநிறுவன கூட்டுறவாளர்கள் வரிசையில் London Stock Exchange (லண்டன் பங்குச் சந்தை) குழுமமும் இந்நிவாரணப்பணியில் கைகோர்த்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக, நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 200,000 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்கும் நோக்கில் 'மனிதநேய ஒன்றிணைவு' திட்டத்தின் மூலம் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் இதுவரை 115,000 இற்கும் மேற்பட்ட ஆதரவற்ற குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இடமிருந்து வலமாக LSEG இன் இலங்கைக்கான தயாரிப்பு முகாமைத்துவ மற்றும் வணிகப் பகுப்பாய்வுத் தலைவர் ஹிரான் ஜயரத்ன, சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டொக்டர் வின்ய ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும தலைமை நிதி அதிகாரி ஹாங் சோ வோங், LSEG தொழில்நுட்ப மூலதனச் சந்தைகள், லண்டன் பங்குச் சந்தையின் இலங்கை குழுமத்தின் மனிதவளத் தலைவர் புலஸ்திகா வீரசிங்க, CSR மற்றும் நிலைபெறுதகு இணை முகாமையாளர் சாரா சடுன்.

'மனிதநேய ஒன்றிணைவு' நடவடிக்கையில் தமது நிறுவனம் பங்கேற்பது குறித்து கருத்து தெரிவித்த லண்டன் பங்குச் சந்தையின் இலங்கை குழுமத்தின் மனிதவளத் தலைவர் புலஸ்திக வீரசிங்க "இலங்கையின் தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவன கூட்டுறவாளர்கள் இலங்கையை தற்போதைய பொருளாதார நிலையலிருந்து மீட்டெடுக்க முன்வருவதைப் பார்க்கையில் அது நம்மிலும் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, லண்டன் பங்குச் சந்தையானது நமது சமூகத்திற்கு ஏதாவது ஒன்றை மாற்றீடாக செய்ய வேண்டும் என்று உறுதியாக நம்புகிறது. அதன்படி,எமது நாட்டுக்கு மிகவும் இன்றியமையாத தருணத்தில் எமது சொந்த மக்களுக்கான கடமையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்கிய 'மனிதநேய ஒன்றிணைவு' குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

நாடு முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் பங்களிக்குமாறு ஏனைய அனைத்து குடிமக்களையும் நிறுவனங்களையும் 'மனிதநேய ஒன்றிணைவு' அழைக்கிறது. https://dig.lk/donate_s என்ற இணையத்தளத்தைப் பார்வையிடலாம் மற்றும் அவர்கள் தமது கிரெடிட்/டெபிட் கார்ட்களை பயன்படுத்தி அல்லது வங்கிப் பரிமாற்றம், Star Points, eZCash, genie, வங்கி வைப்பிலிடல் அல்லது 077 642 1421 என்ற எண்ணுக்கு ரீலோட் செய்தல் என பல வழிமுறைகளில் பணம் செலுத்தலாம். அத்துடன் www.karuna.lk Crowdfunding தளம் வழியாகவும் வசதியாக நன்கொடைகளை அளிக்கவும் முடியும்.

'மனிதநேய ஒன்றிணைவு' பற்றிய மேலதிக விபரங்களுக்கு dig.dialog.lk/manudammehewara க்கு செல்லுங்கள்.

வர்த்தக வள முகாமைத்துவம் (ERP) ஒன்லைன் திட்டம் முன்னெடுப்பு

களனி பல்கலைக்கழகம், தம்மிக்க மற்றும் பிரிசிலா பெரேரா மன்றம் புரிந்துணர்வு உடன்படிக்கை

களனி பல்கலைக்கழகம் (UoK), தம்மிக்க மற்றும் பிரிசிலா பெரேரா மன்றம் (DP Foundation) ஆகியன இணைந்து கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. வர்த்தக வள முகாமைத்துவம் (ERP) தொடர்பில் 'ஒன்லைன்' சான்றிதழ் கற்கை ஒன்றை உருவாக்குவதே இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கமாகும்.

வர்த்தக வள முகாமைத்துவம் (ERP) தொடர்பில் தேவையான அறிவை இலவசமாகக் கற்பதற்கு வாய்ப்பு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது SAP அறிவு மற்றும் திறமையை சிறப்பம்சமாகக் கொண்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ளதோடு, வர்த்தக வள முகாமைத்துவத் துறையில் பயிற்சி பெறுவோர் தொடக்கம் உதவி ஆலோசகர்கள் வரை ஏழு துறையினருக்கு வாய்ப்புகளை உருவாக்குகிறது.

களனி பல்கலைக்கழகத்தின் இந்த புதிய திட்டத்தை உருவாக்குவதற்கு டி.பி. மன்றம் (DP Foundation) அதன் டி.பி. எடியுகேஷன் (DP Education) மூலம் திட்டத்தின் உள்ளடக்கத்தை தயாரிப்பதற்குத் தேவையான நிதி மற்றும் மனித வளத்தை பெற்றுத் தருவதற்கு பங்களிப்புச் செய்கிறது.

இது டி.பி. எடியுகேஷன் 'மன்றத்தின் ஒன்லைன் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இதற்கு முன்னர் இவ்வாறான இரட்டைத் திட்டம் ஒன்று மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதோடு, முதல் திட்டமாக Trainee Full Stack Developer 'ஒன்லைன்' நிகழ்ச்சி இருந்தது. இன்று 135,000 இற்கும் அதிகமான மாணவர்கள் அதனுடன் இணைந்துள்ளனர்.

TraineeFull Stack Developer கற்கைக்கு https://open.uom.lk/ என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும். அது தொடர்பிலான இரண்டாவது திட்டமானது வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் தரத்திலான அமெரிக்க திட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் சான்றளிக்கப்பட்ட CAPM தரத்திலான 'ஒன்லைன்' கற்கை ஒன்றை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா மற்றும் பிரிசிலா பெரேரா ஆகியோரின் நன்கொடையான டி.பி. மன்றம் (DP Foundation), இலங்கையின் அறிவு சார்ந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கை பல்கலைக்கழக இலவச 'ஒன்லைன்' கற்பித்தல் அரங்மான டி.பீ. எடியுகேஷன் (DP Education) உருவாக்கப்பட்டுள்ளது.

டி.பி. எடியுகேஷன் தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு https://open.uom.lk/ இணையதளத்திற்கு பிரவேசிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தொழிலதிபர் ரஞ்சிதமூர்த்திக்கு அமெரிக்க பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவம்

கிழக்கின் பிரபல தொழிலதிபரும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவருமான சைவப்புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வர்த்தகத் துறைக்கான 'கௌரவ கலாநிதி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்.

அமெரிக்க தேசிய வர்த்தக பல்கலைக்கழகமானது (American National Business University) உலகளாவிய ரீதியிலே நடத்திய தேர்விலே இலங்கையின் மட்டக்களப்பில் இருந்து பிரபல தொழிலதிபர் ரஞ்சிதமூர்த்தியை தெரிவு செய்திருக்கிறது.

'Doctor of Business Administration' என்ற இப்பட்டத்தைப் பெற்ற முதலாவது கிழக்கு மாகாணப் பிரமுகர் ரஞ்சிதமூர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கான விருது வழங்கும் வைபவம் கொழும்பு தாஜ்சமுத்ரா நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. இதேவேளை இலங்கை சாதனையாளர் மன்றம் ரஞ்சிதமூர்த்திக்கு 'லங்கா தேசமான்ய' என்ற கௌரவப்பட்டத்தை வழங்கி கௌரவித்திருந்தது. இந்த உயரிய இரு கௌரவங்களைப் பெற்ற ரஞ்சிதமூர்த்திக்கு பல நாடுகளிலுமிருந்து பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடியில் பிறந்த ரஞ்சிதமூர்த்தி தற்சமயம் மட்டக்களப்பில் வசிக்கின்றார். நிர்மாணத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் அவர், பல நிறுவனங்களின் தொழிலதிபராக இருக்கிறார்.

வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

மருதமுனை மருதூர்க்கனி ஞாகார்த்த நூலகத்தில் சிறுவர்களுக்கு கதை கூறல், நூலக விழிப்பூட்டல்

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கல்முனை மாநகரசபையின் கீழ் உள்ள மருதமுனை மருதூர்க்கனி ஞாகார்த்த பொதுநூலகம் ஏற்பாடு செய்திருந்த 'சிறுவர்களுக்கு கதை கூறலும், நூலக விழிப்பூட்டல் நிகழ்வும்' மருதமுனை பொதுநூலக சமூகவள நிலையத்தில் நூலகர் எம்.ஏ.சி. ஹரீஷா சமீம் தலைமையில் நடைபெற்றன. பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம். வானொலியின் பிரதிப் பணிப்பாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான பஷீர் அப்துல் கையூம் கலந்து கொண்டார். விஷேட அதிதியாக வர்த்தகர் எம்.ஐ.உபைதுர் றஹ்மான்,சிறப்பு அதிதியாக வர்த்தகர் எஸ்.ஏ. சாதிக்கீன் பங்கேற்றனர். அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் பி.எம். எம்.ஏ.காதர் மற்றொரு அதிதியாக கலந்து கொண்டார்.

மருதமுனை பிதேசத்தில் உள்ள அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, அல்ஹம்றா வித்தியாலயம், அல்மினன் வித்தியாலயம், அல்மதீனா வித்தியாலயம், அக்பர் வித்தியாலயம், அல்ஹிக்மா ஜுனியர் பாடசாலை, பெரியநீலாவணை புலவர்மணி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தரம்_3 வகுப்பில் கற்கின்ற 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு கதை கேட்டனர்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இளைஞர் கே.எல். நஜாத் என்பவர் சுலைமாலெவ்வை என்ற பெயரோடு வயது முதிர்ந்தவர் போன்று வேஷமிட்டு பல கதைகளைச் சொல்லி மாணவர்களையும். ஆசிரியர்களையும். அதிதிகளையும் மகிழ்வித்தார். இங்கு வர்த்தகர் எஸ். ஏ.சாதிக்கீன் அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் அதிதிகள்,ஆசிரியர்களுக்கும் குளிர்பானம் வழங்கி மகிழ்வித்தார்.

விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட வர்த்தகர் எம்.ஐ.உபைதுர் றஹ்மான் மருதமுனை மருதூர்க்கனி ஞாகார்த்த பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி சிறுவர்கதை நூல்களை நூலகர் எம். ஏ.சி.ஹரீஷாவிடம் அன்பளிப்பாக வழங்கினார்.அத்துடன் கதை கூறி மகிழ்வித்த இளைஞர் கே.எல். நஜாத், நூலகர் ஹரீஷா ஆகியோர் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற கேள்வி, பதில் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்களும் நூலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இங்கு ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...✍
(மருதமுனை தினகரன் நிருபர்)

நாட்டை கட்டியெழுப்ப கட்டுமானத்துறையில் சூழல் நேய அபிவிருத்தி அவசியம்

இலங்கையின் சிறந்த அடையாளமாக தாமரைக் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது. விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் விமர்சனங்களைத் தாண்டி இலங்கையின் மிக முக்கியமான ஒரு சொத்தாக தாமரைக் கோபுரம் அமைந்துள்ளது....

கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தின் உறுப்பினர் கிளிநொச்சி குரு ஹார்ட்வெயார் உரிமையாளர் நடராசா சிவக்குமார் நீண்ட காலமாக சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். தமது வர்த்தகத் துறையின் மூலம் அமெரிக்காக உள்ளிட்ட பல நாடுகளுக்கு விஜயம் செய்தவர். இந்நாட்டின் பொருளாதார நிலையை கட்டி எழுப்புவதற்காக கட்டுமானத் துறையில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் தினகரன் பத்திரிகைக்கு நடராசா சிவக்குமார் வழங்கிய நேர்காணல்

கேள்வி: சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான கட்டட நிர்மாணத்துறை சமூக மட்டப் பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?

இலங்கையைப் பொறுத்தவரையில் மிக அண்மைக் காலம் வரை உட்கட்டமைப்பு பணிகள் மிகப் பின்தங்கியதாகவே இருந்து வருகிறது. இதற்கான பிரதான காரணம் இலங்கையின் பொருளாதார வலுவூட்டலுக்கான பிரதான நிர்மாணம், உட்கட்டமைப்பு, அதி உயர்ந்த பங்களிப்பு வழங்கும் என்ற நம்பிக்கை சிறு மற்றும் பெரிய முதலீட்டாளர்கள் மத்தியில் இருக்கவில்லை என்றே கருதுகிறேன். ஆனால் அண்மைய காலங்களில் சிந்தனைகளில் பல மாற்றங்கள் வரத் தொடங்கியிருப்பதனால் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மெதுவாக உட்கட்டமைப்பு வசதிகள் முறைப்படி அமைக்கப்படத் தொடங்குகின்றன.

குறிப்பாக கொழும்பு நகர அபிவிருத்தி என்பது ஒரு சிறந்த மைல் கல்லாகவே நான் கருதுகிறேன். மற்றும் மாவட்ட நகரங்களிலும் புதிய கட்டட வடிவமைப்பு நகர வடிவடைப்புக்கள் சிறிய சிறிய அளவில் நடந்து வருகின்றன.

இவைகள் யாவும் ஒரு முன்னுதாரணமாக நான் கருதுகிறேன்.

ஆனால் இவைகளின் விளைத் திறன் போதுமானதாக இல்லை. இவற்றில் நாட்டினுடைய வருமானத்திற்கான பங்களிப்பு என்பது மிகக் குறைந்தளவே கொடுக்கப்படுகின்றன. இவற்றைக் கட்டமைப்பதற்கான செலவீனங்கள் அதிகமானதாக இருக்கின்றன. ஆனால் நாட்டுக்கு கிடைக்கக் கூடிய வருமானங்கள் பெரியளவில் இல்லை என்பதே எனது கரிசனையாக இருக்கிறது.

கேள்வி: நாட்டின் பொருளாதாரம், கட்டட நிர்மாணத்துறை குறித்துப் பேசுகிறீர்கள். எவ்விதமான கட்டட நிர்மாணத்துறை இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்.?

நான் சிறு வயதில் இருந்தே கட்டட நிர்மாணத்துறையில் ஓர் வியாபார வழிமுறைகளைக் குறித்து சிந்தித்து வந்திருக்கின்றேன். ஆனால் இந்த கட்டட நிர்மாணத்துறை வியாபாரத்துறையிலே நான் சிறுவயது முதல் ஈடுபட்டு இப்போது ஓரளவு பெரியளவிலே இதை நிர்வகித்து வருகிறேன். என்னுடைய அனுபவப்படி எமது பிரதேசங்களில் கட்டமைக்கப்படும் அனைத்து நிர்மாண அபிவிருத்திகளும் அநேகமாக சேவை அடிப்படையிலேயே இருக்கின்றன. சேவை அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. வீதியாக இருக்கலாம் அல்லது உட்கட்டமைப்பு சார்ந்த அனைத்தும் சேவை நிலையிலேயே இருக்கின்றன.

என்னுடைய பார்வையில் இவ்விதமான கட்டட நிர்மாணப் பணிகளைத் தாண்டி நாட்டிற்கும் உள்ளூர் கிராம மக்களுக்கும். வருமானம் தரக் கூடிய உப கட்டட நிர்மாணத் துறை சார்ந்த விடயங்களைக் குறித்து நாம் இன்னும் உறுதியாக பயணிக்க வேண்டும் என கருதுகிறேன். அப்படிப்பட்ட கட்டட நிர்மாணத் துறை குறித்ததான சிந்தனைகள் எமது பிரதேசத்தில் அதிகமாகத் தேவையாக இருக்கிறது என நான் கருதுகிறேன்.

கேள்வி: இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கான கட்டட வடிவமைப்புக்களில் உங்களது கனவு என்னவென்று கூறினீர்கள் என்றால் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

இன்று உலக மக்களால் அதிகம் ஈர்க்கப்பட்ட சுற்றுலா மைய நாடுகளை நீங்கள் பார்க்கலாம். அந்த நாடுகளின் கட்டட வடிவமைப்பு நிர்மாணப் பங்களிப்புமே உலக மக்களை அந்த நாடுகளை நோக்கி சுற்றுலாவுக்கு ஈர்ப்பதை நாங்கள் காணுகின்றோம். குறிப்பாக ஐரோப்பாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வெளியில் வலை குடா என்று சொல்லுகின்ற பொழுது டுபாய், கட்டார், சவூதி அரேபியா போன்ற நாடுகள் மற்றும் கிழக்காசிய நாடுகள் என்று சொல்லப்படக் கூடிய சீனா, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகளிலும் கட்டட நிர்மாணத் துறையின் வளர்ச்சி அபரிதமானது. மிகப் பெரியது. மிகச் சிறப்பானது. எனவேதான் அநேகமான மக்கள் அந்த நாடுகளை தமது சுற்றுலா இடங்களாகக் கருதி அதை தெரிவு செய்து அந்நாடுகளுக்குச் செல்வதை நாங்கள் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிர்மாணத் துறையின் ஒரு சிறிய பாகத்தையாவது இலங்கை போன்ற ஒரு அழகிய நாட்டில் நாம் இதுவரை ஏற்படுத்த வில்லை. இதற்கான பல காரணங்கள் இருக்கின்றன. அவைகள் குறித்து நாம் அதிகமாக பேச வேண்டியதாக இருக்கிறது எனக் கருகிறேன்.

கேள்வி: நீங்கள் கூறியது போல சிங்கப்பூர் மற்றும் வகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள கட்டட நிர்மாணத் துறையின் அதீதமான வளர்ச்சி இலங்கையில் ஏற்படுவதற்கு என்ன வகையிலான பங்களிப்பு செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையில் நான் மேற்குறிப்பிட்ட விடயங்களில் சிறிய அளவிலே மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி இருக்கிறது. கடந்த 30 வருடங்களில் இலங்கையில் மிகச் சிறந்த கட்டட நிர்மாணம் வளர்ச்சியும் ஓரளவுக்கு பாராட்டப்படக் கூடிய ஒன்றுதான். குறிப்பாக கொழும்பு நகரிலும் தென் மாகாணத்திலும் மத்திய மலை நாட்டுப் பகுதியிலும் அழகான கட்டட வடிவமைப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அவை போதாது என்று நான் கருதுகிறேன். உதாரணமாக மிக அண்மைய இதனுடைய முன்னேற்றத்தைக் குறித்து முன் வைக்கலாம். இலங்கையின் மிகச் சிறந்த ஓர் அடையாளமாக தாமரைக் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது. பல விமர்சனங்கள் இதில் இருக்கலாம். ஆனால் விமர்சனங்களைத் தாண்டி இலங்கையின் மிக முக்கியமான ஒரு சொத்தாக தாமரைக் கோபுரத்தை நாம் பார்க்க முடியும்.

இது இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையின் மிக உயர்ந்த வளர்ச்சி என்றே கருகிறேன். என்னைப் போன்று சாதாரண கட்டட நிர்மாணத் துறையின் அடிமட்டத் தளத்தில் இருந்து மிக மிக மெதுவாக முன்னேறி வருகின்ற ஒரு மனிதருக்கு தாமரைக் கோபுரம் போன்ற கட்டட நிர்மாணத்துறை ஒரு வெளிச்ச வீடாக ஒரு நட்சத்திரமாகவே எனக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட பல செயற்திட்டங்களை மாவட்ட ரீதியாக நாம் தொடங்க வேண்டும். மாவட்ட ரீதியாக கட்டட நிர்மாணங்களை அந்தச் சூழலுக்கு ஏற்றமாதிரியான பண்பாட்டு விழுமியங்களோடு செய்யத் தொடங்கினால் இலங்கையை நோக்கி பல்வேறு மக்களை நாம் ஈர்க்க முடியும். இலங்கையின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான கட்டட நிர்மாணத் துறையாக நான் கருகின்ற எனது கனவு இதுவாகவே இருக்கின்றது.

கேள்வி: உங்கள் மாவட்டத்தில் கட்டட நிர்மாணம் குறித்ததான உங்கள் பார்வை என்ன?

நான் மாவட்டம் சார்ந்து சிந்திப்பவன் அல்ல. நாடு, தேசம், உலகமெல்லாமே எனது பார்வை. இன்னும் எமது பிரதேசத்தில் அபிவிருத்திகளில் வீதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மிக மெதுவாகவே நடைபெறுகின்றன. குறிப்பாக எமது மாவட்டத்தில் மிகப் பெரிய சொத்தாக நான் கருதும் இரணைமடுக்குளம். இலங்கையின் மிகப் பெரிய இரண்டாவது குளம் அண்மையிலே மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு மிகச் சிறந்த கட்டட நிர்மாணத் துறையின் அண்மைய ஓர் மைல்கல்லாக நான் கருதுகிறேன். ஒரு குளம் பரிபூரணமாகக் கட்டப்படும் போது பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் பசியின்றி வாழ அது வழி செய்கிறது என்பது எமது பண்பாட்டுப்பழமொழி. அந்த வகையிலே எமது மாவட்டத்திலே அண்மைக் காலங்களில் பல குளங்கள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. குளங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. இது இலங்கையிலே மிக முக்கியமான கட்டட நிர்மாணத் துறையில் நடைபெற்றிருக்கக் கூடிய மிகப் பெரிய புரட்சியாக, மாற்றமாக நான் கருதுகிறேன்.

அநேகமாக எமது மாவட்டத்திற்கு மட்டுமல்ல அனைத்து மாவட்டங்களிலும் கடந்த பல தசாப்தங்களாக குளங்கள் புனரமைக்கப்படுவது நிர்மாணிக்கப்படுவது மிக முக்கியமான விடயமாக இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட குளங்கள் மீள நிர்மாணிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டிருந்தும் கூட நம்முடைய நாடு இன்று உணவு பற்றாக் குறை சவால்களை எதிர்கொள்கிறது என்பது விவசாயத் துறைக்கும் கட்டட நிர்மாணத்துறைக்கும் இருக்கக் கூடிய சந்தேகமாகும். மாற்றம் தேவை என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் நாம் குளங்களை அமைக்கின்ற போது நீரை சேமிக்கின்றோம். கட்டட நிர்மாணத் துறை நீரைச் சேமிப்பதற்கான பங்களிப்பைக் கொடுக்கிறது. ஆனால் அந்த நீர் எவ்விதமான விவசாயத் துறைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பது விவசாயத் துறை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். விவசாயத் துறையிலும் நவீன மாற்றங்கள் உள்வாங்கப்படல் வேண்டும். பாரம்பரிய முறைகள் சரியான முறையில் கையாளப்படல் வேண்டும். ஆகவே கட்டட நிர்மாணத்துறையும் எமது பண்பாட்டு முறைமைகளும் ஒன்றிணைகின்ற பொழுது புதிதாக சமூகத்திலே ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று நான் நினைக்கின்றேன்.

கேள்வி: கட்டட நிர்மாணத்துறை எதிர் நோக்கும் சவால்கள் எதுவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

தற்போதைய சவால் நீங்கள் என்னவென்று கேட்டீர்கள்?என்னுடைய பார்வையிலே வளங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்துத் தான் நான் கூறுவேன். நமது பிரதேசத்தில் இருக்கக் கூடிய கட்டட நிர்மாணம் சார்ந்தவைகள் சரியான முறையில் பகிரப்படுதல், சரியான முறையில் பயன்படுத்தப்படல், மிக முக்கியமாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். உங்களுக்கும் தெரியும் இலங்கையைப் பொறுத்தவரை கட்டட நிர்மாணத் துறைக்கான வளங்கள் அல்லது கட்டட நிர்மாணத்துறைக்குரிய பொருட்கள் 90 விகிதமானவைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. குறைந்தது 10 வீதமான வளங்கள் தான் உள்ளூரில் இருப்பவைகள் பாவிக்கப்படுகின்றன. குறிப்பாக மணல் என்பது உங்களுக்குத் தெரியும் ஒரு மிக முக்கியமான வளம் கட்டட நிர்மாணத்துறைக்கு. ஆனால் இலங்கையில் இருக்கக் கூடிய மணல் பங்கீடு. மணலைப் பயன்டுத்துவது குறித்ததான ஒரு சரியான கொள்கைத் திட்டம் முறைப்படி இல்லை. ஆனபடியினாலே பல்வேறு நிலையில் கட்டட நிர்மாணத் துறை பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் இயற்கை வளங்களும் சீரழிக்கப்படுகின்றன. ஆகவே மணல் பாவனை குறித்ததான ஒரு தெளிவான சிந்தனை கட்டட நிர்மாணத் துறையிலான முன்னேற்றத்திற்கு பங்களிப்பு வழங்கும் என்று நான் கருதுகின்றேன்.

இரண்டாவதாக மிக முக்கியமான விடயம். இலங்கையிலே கட்டட நிர்மாணத்துறைக்கு மனித வளம் மிகவும் முக்கியமானது. மனித வளம் மிகவும் அரிதாகிக் கொண்டு வருவதை நான் கவலையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன். இன்று இளம் சமூகத்தினர் கட்டட நிர்மாணத்துறையிலே அதிகமாக ஈடுபடுவதை தவிர்த்திருக்கிறார்கள். இது ஒரு மிகச் சிறந்த தொழிலாக அவர்கள் கருதுகிறார்கள் இல்லை. ஏதோ ஒரு வகையில் கட்டட நிர்மாணத்துறையில் ஈடுபடுவது தங்களுடைய தகுதிக்கு அது பொருத்தமற்றது என்று கருதுகின்றபடியினால் இலங்கை இளைஞர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று அதுவும் குறிப்பாக வளைகுடா நாடுகளுக்குச் சென்று அங்கே கட்டட நிர்மாணத் துறையில் வேலை செய்கிறார்கள். ஆனால் உள்நாட்டில் தமது ஊரில் இருக்கக் கூடிய கட்டட நிர்மாணத் துறையிலே வேலை செய்வதற்கு அவர்கள் முன்வருவதில்லை. இது உண்மையிலே கலைக்குரிய விடயம்.

கேள்வி: மேசன், தச்சன். தொழில் முனைவோர் பற்றி உங்களது கரிசனை புரிகிறது. இதில் மாற்றம் ஏற்பட என்ன செய்ய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

வெளிநாடுகளில் இத்தொழில் முனைவோர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள் கௌரவமான சமூக அந்தஸ்தும் மிக உயர்ந்த ஊதியமும் வழங்கப்படுகிறது. அந்தப் பண்பாடு எமது நாட்டிலே இதுவரையில் சரியான முறையில் கட்டமைக்கப்படவில்லை. அப்படிப்பட்ட விதிமுறைகளும், நடைமுறைகளும் எமது மண்ணில் உருவாகுமானால் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்களை நாம் உருவாக்க முடியும். இதற்கான சிந்தனை பாடப் புத்தகத்தில் இருந்து தொடங்க வேண்டும். நமது அழகியல் சார்ந்த சிந்தனைகளை பாடப் புத்தகங்கள் பேசினால் தான் சிறுவர்கள் மத்தியிலே தமது எதிர்கால தொழில் முறைக்கான துறையாக கட்டடத் துறையும் ஒன்று இருக்கிறது

என்பதை அவர்கள் உணர்ந்து புரிந்து அவர்கள் அத்துறையிலே ஈடுபடுவதற்கான வாய்ப்பை நாம் பெற்றுக் கொடுக்க முடியும். மிகச் சிறந்த கட்டடத் தொழில் முனைவோர் ஒரு வைத்தியரை விட அதிகமான பணம் உழைக்கிறார்கள் என்பதை நமது இள சமூகம் அதிகமாக மறந்து விடுகிறது. ஆனால் அந்த சிந்தனை அனுபவம் பகிரப்படாமல் இருக்கிறபடியினாலே கட்டட நிர்மாணத் துறையின் அடிப்படைத் தளத்தில் நின்று பணிபுரிவோர்கள் மிக சிறிய அளவிலே வெற்றி பெறுகிறார்கள் என்பது வெளி வருவதில்லை. இன்னும் குறிப்பாக கட்டட நிர்மாணத் துறையிலே ஈடுபடக் கூடிய அடிமட்டத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு, காப்புறுதி அவர்களுக்கான ஓய்வூதியம், பாதுகாப்பு நடைமுறை சார்ந்த விடயங்கள் இலங்கையில் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அவ்விதம் கடைபிடிக்கப்படுமானால் கட்டட நிர்மாணத் துறையிலே

இலங்கையில் மிகச் சிறந்தவர்களை நாம் உருவாக்க முடியும் என்று கருகிறேன்.

கேள்வி: உங்கள் எதிர்காலத் திட்டங்களில் தேச அபிவிருத்திக்கான உங்கள் முன்மொழிவுகள் என்ன?

எமது பிரதேசங்கள் இயற்கை வளமிக்கப்

நேர்கண்டவர்: இக்பால் அலி ...✍

பிரதேசங்கள். அவற்றை சிதைக்காமல் அதனுடன் இணைந்து செல்லக் கூடிய கட்டட வடிவங்களை அமைப்பதன் மூலம் உலக மக்களை ஈர்க்க முடியும் என நான் கருதுகிறேன். அதுவும் உள்ளூர் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான மிக நேர்த்தியான பங்களிப்பாக அது அமையும் என்று நான் கருதுகிறேன்.

அதே நேரம் சூழல் நேய கட்டட நிர்மாணத் துறைக்கான சிந்தனைகளை எமது பிரதேச கட்டட நிர்மாணத்துறை சார்ந்த பொறியியலாளர்கள்,கட்டட வரைபடக் கலைஞர்கள் போன்றவர்கள் வடிவமைத்து தமது பிரதேசங்களில் கட்டமைக்க வேண்டும்.அப்படிப்பட்ட கட்டட நிர்மாணங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் சூழலுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாதவாறு இயற்கை கட்டட நிர்மாணத்துறையை உருவாக்குகின்ற பொழுதுதான் எமது இயற்கை பாதுகாக்கப்படும் எமது சூழல் பாதுக்கப்படும் எமது சந்ததிகள் பாதுகாப்பான முறையில் அந்த கட்டடங்களில் வாழ்வதற்கான ஓர் ஆரோக்கியமான வாழ்வியல் கிடைக்க முடியும். எமது எதிர்கால சமூகத்திற்கு எமது இலங்கையை அழகாக கையளிக்க முடியும். இவை எல்லாவற்றுக்கும் நல்ல சிந்தனை ஆற்றல் உள்ள மனிதர்கள் எமது சமூகத்திலே கட்டட நிர்மாணத் துறையில் உருவாக வேண்டும் என்பது எனது கனவாக இருக்கிறது.

கேள்வி: உங்கள் சமூக சேவை குறித்தான அனுபவங்கள்?

2016 இல் ரோட்டரிக் கழகத்தில் இணைந்து கொண்டேன். சமூகப் பணிகளையும் தலைமைத்துவப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தது ரோட்டரிக் கழகம்தான். கிளிநொச்சியை வசிப்பிடமாக இருந்தாலும் கிளிநொச்சியிலுள்ள எல்லா இடங்களும் எனக்கு தெரியாது. ரோட்டரிக் கழகத்தில் இணைந்த பின்னர்தான் கோணாவில், முல்லைத்தீவு வரைக்கும் கஷ்டப்பட்ட மக்கள் இருக்கும் இடங்களை நாங்கள் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்விடங்களைச் சென்று பார்க்கும் போது என்ன னென்ன செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் மனதில் தோன்றும். என்ன நல்லது செய்யத் தொடங்கினாலும் நான் முதலாவது கையை உயர்த்தி விடுவேன்.

ரோட்டரிக் கழகத்தில் நான் இருந்த காலகட்டத்திலுள்ள தலைவர்மார்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய வித்தியாசமான திறமைகளையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஒவ்வொருவரும் தமது தலைமைத்துவத்தில் உள்ள ரோட்டரிக் கழக உறுப்பினர்களை வைத்து சமூக சேவையை செய்து கொண்டு போவார்கள். ஆனால் வணபிதா யோசுவா அடிகளார் தனக்கு இயன்ற வரையில் தானே செய்து விட்டு தன்னை அடையாளப்படுத்தாமல் அமைதியாகவும் எல்லோரும் சேர்ந்து செய்ததாகவும் இருந்து விடுவார். இவர் ரோட்டரிக் கழகத்திற்கு கிடைத்த பெரும் பேறு. வணபிதா யோசுவா அடிகளார் அவர்களிடம் கற்றுக் கொண்ட அனுபவம் பெரிய அனுபவம் எனலாம். அவர் 24 மணித்தியாலமும் சமூக இயக்கச் செயற்பாட்டில் ஈடுபாடு உடையவர். அவர் ரோட்டரிக் கழகத்திற்கு தலைவராக வந்தவுடன் அரை ஆண்டிலே முழு ஆண்டிலுமாக செய்கின்ற வேலையை செய்து விட்டோம். அப்படியென்றால் நிறைய சமூகப் பணிகள் செய்வதற்கு இன்னும் எத்தனையோ இருக்கிறது. உறுப்பினர்களுக்கு நேரமில்லை என்று இருந்தாலும் அவர்களுடைய வேலைகளையும் சேர்த்து வண பிதா யோசுவா அடிகளார் செய்து விடுவார். அவர் யாரோடு கோபித்துக் கொள்ளவும்மாட்டார் கோபமும் வராது. யார் தீங்கு செய்தாலும் அவர்களையும் அரவணைத்துக் கொண்டு முன்செல்வார். ஒரு வித்தியாசமான மனிதர்.

கேள்வி: உங்கள் அமெரிக்க பயணம் குறித்த அனுபவத்தைக் கூறுங்கள்?

இன்சி சீமெந்து வடமாகாண விநியோகஸ்தராக இருக்கிறேன். 2019, 2020 ஆம் ஆண்டுகளில் செய்த விநியோகத்திற்காக அமெரிக்கா செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இலங்கையில் இருந்து 43 பேர் சென்றோம். எல்லா வகையிலான வசதிகளையும் சீமெந்து கம்பனி செய்திருந்தது. எனக்கு ஐந்து வருட மல்டிபெல் விசா கிடைத்தது.

அந்நாட்டில் சுவர்களுக்கு 'கலர் பெயின்ற்' அடிப்பது என்பது சரியான குறைவு. சீமெந்தினால் பூசி எப்படி இருக்கிறதோ அப்படியோ இருக்கும் அல்லது வெள்ளை அல்லது கறுப்பு இருக்கும். உலக வர்த்தக நிலையத்திற்குச் சென்றோம்.

அங்கு உயிர் இழந்த 3000 பேர்களுடைய (ஆன்மாக்களுடைய) பெயர் எழுதி நினைவாலயமாக வைத்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலேயே 104 மாடி கோபுரத்தை கட்டியுள்ளார்கள். நாங்கள் 104 ஆம் மாடிக்கே சென்றோம். 47 செக்கனில் 104 ஆவது மாடிக்கு லிப்ட் போய் விடும். அவ்வளவு வேகம். அது போவது தெரியாது. மேலே சென்று பார்த்தால் அதன் அழகு மிகப் பிரமாண்டம். 24 மணித்தியாலங்களும் மக்கள் ஓய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருப்பார்கள்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரச்சினைகளை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று நேற்று (02) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினை, ஓய்வூதியம், பதவி உயர்வு நடைமுறைகள், நிரந்தர நியமனம் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பான பல யோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில், உடனடிக் கவனம் செலுத்தி அவற்றை தீர்க்க துரித நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது ஜனாதிபதியின் செயலாளர், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சூரியாரச்சி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, சமுர்த்தி திணைக்களம் உள்ளிட்ட துறைசார் நிறுவன சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

அறியாமையின் இருளை நீக்க வாசிப்பின் வெளிச்சம் உதவும்

பாலமுனை தினகரன் நிருபர்

வாசிப்பு மாத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர்ரஹீமிய்யா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பரீதா தலைமையில் நடந்த இந்நிகழ்வில், உதவிக் கல்விப்பணிப்பாளர் ஹனீபா இஸ்மாயில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். வளவாளர்களாக ஆய்வாளரும் சமூக செயற்பாட்டாளருமான சிராஜ்மசூர், இலங்கை வானொலி சிரேஷ்ட அறிவிப்பாளரும், பிறை எப்,எம் சந்தைப்படுத்தல் முகாமையாளரும் கவிஞருமான எஸ்,ரபீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய எஸ்,ரபீக் தெரிவித்ததாவது,

வாசிப்பு என்பது அறிவின் எதிர்கால நுழைவாயில். சிறு வயதுமுதலே மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் செலுத்த வேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு புத்தகங்களை கொண்டு செல்லும் காலங்களில், நான், கவிதைப்புத்தகத் தையும் எடுத்துச் செல்வேன். இந்தப்பழக்கம் உயர்தரம் வரைத் தொடர்ந்தது. இதனால், ஆசிரியர்கள் என்னை வித்தியாசமாக நோக்கினர். இருந்தாலும், இலக்குகள் சரியாக இருந்ததால் அவர்கள், அடையாளந்தெரியாத வகையில் எனக்கு அனுமதி தந்தனர். இந்தப் பழக்கம் இன்று வரையும் தொடர்கிறது. நமது கிராமம் சிறகடித்து உயர்வதற்கு வாசிப்புத்தான் பிரதான இறக்கையாக இருக்கிறது. அறியாமை எனும் இருளுலகுக்குள் ஊடுருவிப்பறப்பதற்கு, அறிவெனும் இறக்கைகளை மாணவர்கள் விரிப்பது அவசியம். வாசிப்புத்தான் இதற்கு வெளிச்சமாக விளங்குவதாகவும் எஸ்,ரபீக் தெரிவித்தார். அதிபருக்கு ஒரு தொகை நூலும் ஆய்வாளர் சிராஜ் மசூரால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், ஆசிரிய நூலகர் ஏ,எல் ஹாரூனும் கலந்துகொண்டார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கௌரவம்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று கல்வி வலயம் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் இணைந்து அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 133 முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவித்தன. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும், ஆரம்பப் பிரிவிற்கான சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டுக்கான இணைப்பாளரும், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. கல்விப் பிரிவுத் தலைவருமான ஏ.எல்.பாயிஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, அட்டாளைச்சேனை அல்சக்கி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அர்ப்பணிப்புகளுடன் சேவையாற்றி வரும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளா எம்.ஏ.சீ. அஹமட் சாபீர் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் கல்விப் பணியாற்றி வரும் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் கவிஞர் ஏ.ஜீ. பஸ்மில் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, திராய்க்கேணி, தீகவாபி பிரதேசங்களிலுள்ள முன்பள்ளிகளில் கடமையாற்றும் மூவின ஆசிரியர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.இஸ்மாயில், அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன் பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.ஜெ சீலா றசான், அட்டாளைச்சேனை கல்விக் கோட் அதிபர் சங்கத் தலைவரும், அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய அதிபருமான எம்.ஏ.அன்சார், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் முஹம்மட் றியாஸ் உட்பட அதிகாரிகள் , உத்தியோகத்தர்கள், உதவி வழங்கியோரும் கலந்து கொண்டனர்.

ஆழ்கடல் ஊடுருவல் கப்பல்...

ஒக்டோபர் மாதம் அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால், இலங்கை கடற்படைக்கு உத்தியோகபூர்வமாக இக்கப்பல் கையளிக்கப்பட்டது. கடற்படையின் செயற்பாட்டுத் தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்பட்ட இக்கப்பல் கொழும்பு கடந்த (03) துறைமுகத்தை நோக்கி பயணத்தை ஆரம்பித்திருந்தது. இந்தக்கப்பல், குறைந்தது 14,000 எம்.என் தாங்குதிறன் கொண்ட ஊடுருவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென தெரிவிக்கப்படுகிறது. 187 பேரை சுமெந்து செல்லும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கப்பலில், அதிநவீன ஆயுதங்கள் மற்றும் இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

முக்கிய பேச்சுவார்த்தை நடத்த...

வகையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருமாறும் அவர் அந்நாட்டிலுள்ள சேவை வழங்குநர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

கொரியாவில் இலங்கையருக்கான தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளல் ஆகியவை தொடர்பில் இந்த விஜயத்தில் முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

பாணந்துறை பாடசாலையொன்றின் ...

நிறுவனமொன்றிலோ கழிவுகளை எரித்தபோது அதிலிருந்து வந்துள்ள புகையை இவர்கள் சுவாசித்துள்ளனர். இதனால், சுவாசிப்பதற்கு கஷ்டப்பட்ட இம்மாணவர்களை பாணந்துறை அரசாங்க வைத்தியசாலையில் அனுமதித்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்கள் எவருக்கும் பாரிய பாதிப்புக்கள் எதுவும் இல்லையென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டு தனியார் பஸ்கள்...

விபத்தில் காயமடைந்த தனியார் பஸ்லின் சாரதி உட்பட பலர் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறும் வீதியின் வளைவுக்கு அருகில், இவ்விபத்து இடம்பெற்றதாகவும் இவ்விரண்டு பஸ்களும் அதிவேகமாக வந்ததாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பாப்பரசர் 01ஆம் பிரான்சிஸ்...

அவாலி ஆகிய நகரங்களுக்கு அவர் செல்வார் எனவும் வத்திகான் ஊடக அலுவலக பணிப்பாளர் மெத்தேயோ புரூணி தெரிவித்துள்ளார்.

எகிப்திய தலைநகர் கெய்ரோவின் அல் அஸ்ஹர் பள்ளிவாசல் மற்றும் இஸ்லாமிய கற்கை நிலையத்தின் இமாம் ஷேக் அஹ்மத் அல் தாயீப்பையும் பஹ்ரெய்னில் சந்திப்பதற்கு பாப்பரசர் திட்டமிட்டுள்ளார்.

அதேவேளை, ஷியா முஸ்லிம்கள் மீதான அடக்கு முறைகளை நிறுத்துமாறு பஹ்ரெய்ன் மன்னர் ஹமட் பின் இஸா அல் கலீபாவை பாப்பரசர் வலியுறுத்துவாரென மனித உரிமை குழுக்கள் நம்புகின்றன.

மரண தண்டனை இரத்துச் செய்வதற்கும், சித்திரவதை குற்றச்சாட்டுக்கள், மற்றும் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கான உரிமை மீறல்கள் குறித்து தீவிரமாக விசாரிக்க வேண்டுமென பாப்பரசர் வலியுறுத்த வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

பிரியமாலி, சிறிசுமன தேரர் உள்ளிட்ட...

சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் (16) வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி உத்தரவை நேற்று கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே பிறப்பித்துள்ளார்.

இச்சந்தேகநபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வரும் விசாரணைகள், முடிவுறாத நிலையில் அவர்களுக்கு பிணை வழங்க முடியாது என்றும், அவ்வாறு பிணை வழங்கப்பட்டால் மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பும் என்ற காரணத்தைக் கவனத்திற்கொண்டுமே, சந்தேக நபர்களுக்கு பிணைகோரி விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளை நிராகரித்து நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதேவேளை, பிரியமாலியின் நிதி மோசடி தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பொரளை சிரிசுமன தேரர், கொழும்பு கோட்டை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை எதிர்வரும் (16) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் திலினி பிரியமாலி, அவரது முறையற்ற கணவரான இசுரு பண்டார மற்றும் திலினி பிரியமாலியின் நிறுவனத்தின் பணிப்பாளர் ககன் பெரேரா, பொரளைசிறி சுமன தேரர் ஆகியோரே நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் (16) வரை சிறைத்தண்டனை அனுபவிக்கவுள்ளனர்.

பருவ மழைக்காலம் முடிந்ததும்...

அவர் மேலும் குறிப்பிடுகையில், "வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு தீர்வுகாணும் வகையில், அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.

பருவ மழைகாலம் நிறைவடைந்ததும் நேரடியாக சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளாரென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கிடைத்த வாய்ப்புக்களை தமிழ்த் தரப்புக்கள் சரியாகப் பயன்படுத்தாததுதான், கடந்த காலங்களில் விட்ட தவறுகளாகும்.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

தற்போது கிடைக்கும் சாதகமான வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, இனியாவது இருப்பதை பாதுகாத்து முன்னோக்கிச் செல்லவேண்டும்.

பிரச்சினைகள் தீர்வை நோக்கி போகவேண்டும்.

மாறாக குழப்பும் நோக்குடன் எவரும் செயற்படக்கூடாது. இதனை குழப்பிக்கொண்டு போகும் நோக்கம் எனக்கில்லை" என அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

வலிகாமம், வடக்கு, மயிலிட்டி துறைமுகத்துக்குச் சென்ற அமைச்சர், அங்கு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டதுடன் பிரதேசக் கடற்றொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட அபிப்பிராயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினார்.

வரவு செலவுத்திட்ட ஆவணம்...

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பங்களிப்பை நிதி அமைச்சுக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சுக்கள் மற்றும் அமைச்சர்களின் யோசனைகள் மற்றும் கருத்துக்கள் இதுவரை நிதியமைச்சுக்கு பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால், அதனை விரைவாக பெற்றுக்கொடுக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2023 வரவு செலவுத் திட்ட ஆவணம் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் நிலையில், நிதி அமைச்சு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் இராஜாங்க அமைச்சுக்கள் அரச நிறுவனங்கள் தனியார் துறை வெளிநாட்டு தூதுவராலய சேவைகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிதிய நிறுவனங்கள் மூலமான தொழில்நுட்ப மட்ட மேற்பார்வை இடம்பெற்று வருகிறது.

அத்துடன் வரவு செலவுத்திட்டத்திற்கான விசேட யோசனைகளை இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்ற விவகாரம் தொடர்பான தெரிவுக்குழு மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்ட கால அட்டவணைக்கிணங்க எதிர்வரும் (14) பிற்பகல் 1.30 மணிக்கு நிதியமைச்சரான ஜனாதிபதியினால் வரவு செலவுத் திட்ட உரை பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெறும் காலங்களில் அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாகவோ தனிப்பட்ட ரீதியாகவோ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதை தவிர்க்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய காரணங்களன்றி வேறு வெளிநாட்டு பயணங்களை இந்தக் காலத்தில் மேற்கொள்வதை தவிர்க்குமாறும் அவர், அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஓமான் அரசாங்கம்... 03ஆம் பக்கத் தொடர்

மருத்துவ உதவிகள் பெரும் உதவியாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார். ஓமான் அரசுக்கும் இலங்கைக்கும் இடையில் தகவல் பரிமாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைச்சரும் ஓமான் தூதுவரும் கலந்துரையாடினர். இலங்கைக்கான ஓமன் தூதுவர் (Said Al Naseer Habi) சையித் அல் நஸீர் ஹார்பி உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, பணிப்பாளர் (மருந்துகள் உதவி ஒருங்கிணைப்பு) டாக்டர் அன்வர் ஹம்தானி உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு, விவேகான... 03ஆம் பக்கத் தொடர்

உறுப்பினர் மனோ கணேசன், கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.என்.சில்வா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். நாளை (04) திகதி கொழும்பிலுள்ள ஏனைய பாடசாலை மாணவர்களுக்காக கண்காட்சியொன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு தினங்கள் சமூகத்தினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களும் காலை 09 மணிமுதல் மாலை 05 மணி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் பயனுள்ளவிடயங்கள் இடம்பெறுவதால் அதனைக் கண்டுகளித்து, பயன்பெறுமாறு கல்லூரி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடைமுறைச் சட்ட... 03ஆம் பக்கத் தொடர்

விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் ஆகியோர் இவ்வாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்து கலாசார... 03ஆம் பக்கத் தொடர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகள் மேன்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துவதாகவும் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ்... 03ஆம் பக்கத் தொடர்

சுனில் என்ற உத்தியோகத்தர் அங்கு அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் கடமையை மேற்கொண்டபோது தாக்குதலில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த உத்தியோகத்தரின் இறுதிக்கிரியை இன்று 03 ஆம் திகதி வாரியபொள சுமங்கள குறுக்கு வீதியிலுள்ள பொது மயானத்தில் பூரண பொலிஸ் மரியாதையுடன் இடம்பெறவுள்ளது.

இறக்குமதியாகும் சில... 03ஆம் பக்கத் தொடர்

ஆகிய பொருட்களுக்கு இவ்வாறு சில்லறை விலையை நிர்ணயிக்க முடியுமென அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டுக்கு இந்தப் பொருட்கள் கொண்டுவரப்படும் இடத்திலிருந்து, இறக்குமதியாளர்கள் மூலம் அந்த பொருட்களுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நிர்ணயிக்கும் உச்ச சில்லறை விலையை நியமிக்கமுடியும். இதுதொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு வழங்கப்படும் ஆவணங்கள் ஆங்கில மொழியில் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும் என்றும் அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ.தொ.கா தலைமைகளுடன்... 03ஆம் பக்கத் தொடர்

மதியுகராஜா, இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் மரயா சக்தி மற்றும் கட்சியின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச நிறுவனங்களிடமிருந்தும்...

இதற்கு முன்னர் அரச நிறுவனங்களின் நீர்க்கட்டணத்தை அறவிடும் போது, தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை. அரச நிறுவனங்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டிருந்தது, எனினும் தற்போது நிலையில், அரச நிறுவனங்களிடமிருந்தும் தாமதக் கட்டணத்தை அறவிட நீர்வழங்கல் வடிகாலமைச்சு தீர்மானித்துள்ளது.

நீர்க்கட்டணம் தொடர்பான பட்டியல் கையளிக்கப்பட்டு 90 தினங்களுக்குள் அதனை செலுத்துவதற்கு அரச நிறுவனங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அந்நிறுவனத்திடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்படும்.

இதுதொடர்பில், விரைவில் சுற்றிக்கையொன்றை வெளியிடுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

முட்டையின் விலையை 07 அல்லது...

அது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ள அவர், பண்ணைகளில் தற்போது 45 ரூபாவுக்கு முட்டையை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

முட்டை ஒன்றுக்கான விலையை ஏழு ரூபாவுக்கும் பத்து ரூபாவுக்கும் இடையில் விலை குறைப்பை மேற்கொள்ள முடியும். எனினும் தற்போது வர்த்தகர்கள் அதனை விட அதிக விலைகளுக்கு முட்டைகளை விற்பனை செய்து வருகின்றனர்.

பல்வேறு பொருட்களின் விலைகளும் சற்று குறைவடைந்து வரும் நிலையில், முட்டை விலையையும் குறைக்க முடியும். அதனை விடுத்து வர்த்தகர்கள் முட்டையை கட்டுப்பாட்டு விலைக்கும் அதிகமாக விற்பனை செய்து வருகின்றனர்.

அது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரிஷாட் பதியுதீன் எம்.பி...

கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே, நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை மேற்படி குற்றத்திலிருந்து விடுவிப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான மாஜிஸ்திரேட் நீதவான் விசாரணை நேற்று (02) மீண்டும் நடைபெற்றபோதே ரிஷாட் பதியுதீனை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு மாஜிஸ்திரேட் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுப்பதற்காக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கடந்த ஏப்ரல் மாதம் (21) கைதுசெய்யப்பட்டிருந்தார்.

தமது விடுதலை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில், தனக்கும் ,முஸ்லிம் சமூகத்துக்கும் எதிராக பொய்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. இதனால், குற்றவாளியாக்கப்பட்ட நான், சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

எனினும் நீதிமன்றத்தின் மூலம் தற்போது உண்மை நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை...

உடனடியாக குறைக்கமுடியும் எனக் கூற முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், செப்டெம்பர் மாதத்தில் 69.8 வீதமாக இருந்த பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 66 வீதமாக காணப்படுகிறது. இதனால், அத்தியாவசிப் பொருட்களின் விலை உடனடியாக குறைவடையுமென குறிப்பிடமுடியாது. எவ்வாறெனினும் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் நிதிக் கொள்கையின்பிரகாரம், படிப்படியாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதே எதிர்பார்ப்பாகும்.

இலங்கையானது கடன் வழங்கக் கூடிய நாடு என்பதை கடன் வழங்குநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன் எமக்கு தேவையான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

நாம் அடுத்தடுத்து இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம். நாட்டில் தற்போது நிலவும் ஸ்திரமான அரசியல் மற்றும் சமூக நிலைமை அதற்கு முக்கியமானதாகும். இந்த நிலையை நாம் தொடர்ச்சியாக தக்கவைத்துக்கொள்ள நடவடிக்கையெடுக்கும் போது, எம்மால் அடுத்தவருட இறுதிக்குள் நாட்டை மீண்டும் பொருளாதாரத்தில் பலப்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எல் பீ .ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ .ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனைத் திகதி		முகவரி
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொட.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 434, ஈபபின்யூபெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொட.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 19, பிரதான வீதி, கேகாலை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 81, கண்டி வீதி, வரகாபொல.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 66, தில்ஸ வீதி, தங்காலை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லவ வீதி, நெலுவ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 149, பிரதான வீதி, தெனியாய.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 282, நாலாகம் வீதி, கொழும்பு 14.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 149, கே பி கிரிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம.
01/05/12/19	டிசம்பர் 2022	ரஜாட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம்.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம்.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 26, கண்டி வீதி, மதவாச்சி.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 38, குருநாகல் சந்தி, தம்புள.
01/05/12/19	டிசம்பர் 2022	பிரதான வீதி, மெதிரிகிரிய.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 96, அகலவத்த வீதி, மத்துகம.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 87, பிரதான வீதி, பிட்டிகல.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய.
01/05/12/19	டிசம்பர் 2022	இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 134, பிரதான வீதி, வெண்ணப்புவ.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம்.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம்.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொட.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 69, கிரஉல்ல வீதி, திஹரிய.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 75A, சிலாபம் வீதி, மாரவில.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 661/A, தேவந்த வீதி, ராகம.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 39, கொழும்பு வீதி, கந்தானை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 18, லைகந்த, ஹெந்தல, வத்தளை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 722, வரகொட வீதி, விஹாரை சந்தி, களனி.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 145, மலே வீதி, கொழும்பு 02.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 66, காலி வீதி, கல்கிஸை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 54, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, பொரளை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 197, மஸ்ஜித் வீதி, கொழும்பு 10.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 68, ஹொரண வீதி, பிலிமத்தலை.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ.
02/06/13/20	டிசம்பர் 2022	இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல்.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல்.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 21, தம்புள வீதி, குருநாகல்.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 31, குருநாகல் வீதி, கலேவெல.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 124/A, தூட்டுகெமுனு வீதி, கொஹுவல.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 18, கெகெல்வத்த, பாணந்துறை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 508, காலி வீதி, பாணந்துறை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 534, காலி வீதி, வாத்துவ.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர்.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 175/A, காலி வீதி, பேருவளை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 358, காலி வீதி, அளுத்கம.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 84A, காலி வீதி, தெஹிவளை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 124, காலி வீதி, தெஹிவளை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 269, பிரதான வீதி, அத்திடிய.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 676, காலி வீதி, கொழும்பு 03.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 51A, பபின்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 150, பிரதான வீதி, காலி.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட.
03/08/14/21	டிசம்பர் 2022	இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 44/1, புதிய பேருந்து நிரப்பிட வீதி, மொனராகலை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 14, புதிய நகரம், திக்கல
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 251, பிரதான வீதி, மாத்தளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 55, லோவர் வீதி, பதுளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 26, வங்கி வீதி, பதுளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 52, தன்பார் வீதி, ஹட்டன்.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 230, கண்டி வீதி, மாவனல்ல.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 367/1, அஸந்த மாவத்தை, கொழும்பு 15.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 81, மோதர வீதி, கொழும்பு 15.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 03, சென் ஜூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை
09/15/22/26	டிசம்பர் 2022	MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09.
09/15/22/26	டிசம்பர் 2022	பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 25, ஹிஜிரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08
09/15/22/26	டிசம்பர் 2022	பிரதான வீதி, திருக்கோவில் - 01
09/15/22/26	டிசம்பர் 2022	பிரதான வீதி, பொத்துவில்.
09/15/22/26	டிசம்பர் 2022	இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 25, மப்பமாந்தோட்ட வீதி, அவிசாவளை
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 19, தனமல் விஜய மாவத்தை, பலாங்கொட.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 275, சென்றல் வீதி, திருகோணமலை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 252B, மற்றும் 252/1, கண்டி வீதி திருகோணமலை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா.
10/16/23/27	டிசம்பர் 2022	பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை
10/16/23/27	டிசம்பர் 2022	சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை
10/16/23/27	டிசம்பர் 2022	பிரதான வீதி கிரண்.
10/16/23/27	டிசம்பர் 2022	திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 114, பிரதான வீதி, கந்தளாய்.
10/16/23/27	டிசம்பர் 2022	பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி.
10/16/23/27	டிசம்பர் 2022	சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி
10/16/23/27	டிசம்பர் 2022	பிரதான வீதி, அட்டாளைச்சேனை
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 187, பிரதான வீதி, மன்னார்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.
10/16/23/27	டிசம்பர் 2022	1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
10/16/23/27	டிசம்பர் 2022	P.W வீதி, முல்லைத்தீவு.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 55, கே கே எஸ் வீதி, கன்னாகம்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்.
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி
10/16/23/27	டிசம்பர் 2022	பிரதான வீதி, மல்லாவி
10/16/23/27	டிசம்பர் 2022	இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை
10/16/23/27	டிசம்பர் 2022	இல 3, 5 வல்லை வாதி சங்கானை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை.
10/16/23/27	டிசம்பர் 2022	இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
10/16/23/27	டிசம்பர் 2022	கண்டி வீதி, கொடிகாமம்.
10/16/23/27	டிசம்பர் 2022	575, K.K.S வீதி, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை
10/16/23/27	டிசம்பர் 2022	எண்.12, வார்டு எண்.06, பிரதான வீதி, பேசாலை, மன்னார்

ஏதேனும் முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்பி .ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமை உள்ளது

LB FINANCE

உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

பெறுகை அறிவித்தல்

"ஜனஜய சிட்டி" கட்டிடத்திற்கு கண்ணாடி பொருத்துவதற்கான விலைமனுக்கோரல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரசபைக்குச் சொந்தமான "ஜனஜயசிட்டி" கட்டிடத்திற்கு கண்ணாடி அமைப்பை உருவாக்குவதற்கு பொருத்தமா சிறந்த நிலைத்தன்மையுடன் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து **2022.11.11** ஆம் திகதி **பி.ப.2.00** கேள்வி மனுக்கள் கோரப்படும். உங்கள் நிறுவனத்திடமிருந்து முகவுரைக் கடிதத்தை சமர்ப்பித்து **ரூ.5,000/-** கட்டணத்தை இந்த அலுவலகத்தில் செலுத்திய பின்னர் குறித்த கேள்விமனு படிவங்களை **2022.11.10** ஆம் திகதி **பி.ப.3.00** மணி வரை பெற்றுக் கொள்ளலாம். **2022.11.11** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை கேள்விமனு படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றைய தினம் **பி.ப.2.30** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

நகராட்சி ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,
2022.11.03

தெஹியோவிட்ட பிரதேச சபை

2023ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01 பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்

1. அனைத்து வகையான காகிதாதிகள்
2. டோனர், ரோணியோ மை, ரிபன்கள் போன்றன
3. அலுவலக உபகரணங்கள் (தொலைநகல், ரோணியோ, புகைப்படப் பிரதி இயந்திரங்கள் போன்றன)
4. அலுவலகத் தளபாடங்கள் (உருக்கு, மரம்)
5. மின் உபகரணங்கள், வீதி விளக்குகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
6. நீர்க்குழாய், நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டு துணைப்பொருட்கள்
7. கணனி இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
8. மோட்டார் வாகன மற்றும் இயந்திரோபகரண உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெட்டரி மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள்)
9. சீருடைத் துணிகள், காலணிகள், காலுறைகள், மழை அங்கி, திரைச்சீலைகள், மேசை விரிப்புகள் போன்றன
10. சுகாதார, துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகைகள், கிருமிநாசினிகள், சவர்க்காரம், பூட் கையுறைகள் போன்றன)
11. வாகனம், விலங்கு அனுமதிப்பத்திரம், வரிப்பணத் தகடுகள்
12. வீதிப் பராமரிப்பு மற்றும் வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, சவல், ரேக்கைகள், அரிவாள், அளவை நாடாக்கள்)
13. நிர்மாணப் பொருட்கள் (கல், மணல், சீமெந்து, கூரைத் தகடுகள், ஓடுகள், மரம், மண் முதலியன)
14. அனைத்து வகையான கொங்கிறீட் உற்பத்திகள் (ஹியும் குழாய், கம்பி ஆணிகள், புளொக் கற்கள் போன்றன)
15. உரம், களைநாசினிகள், பீடை நாசினிகள்
16. கிறீஸ், எண்ணெய் வகைகள்

02. சேவைகள் வழங்குதல்

1. மோட்டார் வாகன திருத்தவேலைகள்
2. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
3. அலுவலக மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
4. அலுவலகத் தளபாடங்களின் திருத்தவேலைகள்
5. கணனி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாக திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
6. அச்சு வேலை சேவைகளை வழங்குதல்
7. பதாகைகள், பெயர்ப் பலகைகள் தயாரித்தல் மற்றும் சுவரொட்டிகளை அச்சிடல்
8. இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல்
9. உணவு பானங்களை வழங்குதல்
10. சட்டத்தரணி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
11. நில அளவை சேவைகளை வழங்குதல்
12. சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிபெயர்ப்புச் சேவைகள்
13. போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் (பஸ், வேன், முச்சக்கர வண்டிகள்)
14. மின் பிறப்பாக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல்
15. போக்குவரத்து மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கமர்த்துதல் (லொறி, டிப்பர், மோட்டர் கிரேடர், J.C.B. இயந்திரங்கள், ஸ்கவேட்டர்கள், வீதி அழுத்திகள்)
16. வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
17. ஆடைகள் வழங்குதல்
18. கூட்டங்கள் மற்றும் உற்சவங்களுக்கான மண்டப வசதிகளை வழங்குதல்
19. கூட்டங்கள் மற்றும் உற்சவங்களுக்கான உபகரணங்களை வழங்குதல்
20. பட்டறையாளர்களின் சேவைகள்
21. வாகன ஹோர்ஸ் மற்றும் கேபள் திருத்தவேலைகள்
22. கடைசல் பட்டறை சேவைகள்
23. உருக்கியொட்டுதல் மற்றும் இரும்பு வேலைகள்

03. ஒப்பந்தக்காரர்கள்

ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2022-12-31ஆம் திகதிக்கு முன் பதிவுக் கட்டணத்துடன் தகுதிகள் மற்றும் சொத்துக்களை சமர்ப்பித்தல் வேண்டும். (விண்ணப்பப் படிவக் கட்டணம் 100.00)

பண வரையறை	பதிவுக் கட்டணம்
1. ரூபா 100,000.00 வரை	ரூபா 250.00
2. ரூபா 200,000.00 வரை	ரூபா 500.00
3. ரூபா 300,000.00 வரை	ரூபா 750.00
4. ரூபா 400,000.00 வரை	ரூபா 1,000.00
5. ரூபா 500,000.00 வரை	ரூபா 1,250.00
6. ரூபா 500,000.00 க்கு மேல்	ரூபா 1,500.00

பொது நிபந்தனைகள்

01. பொருள் மற்றும் சேவை வழங்குநராக பதிவு செய்து கொள்பவர்கள் எமது அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத 500.00 ரூபா கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. ஒன்றுக்கு மேற்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்கான விண்ணப்பிப்பவர்கள் மேலதிகமான ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் 100.00 கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
03. காசோலை மற்றும் காசுக் கட்டளை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதானால் செயலாளர், பிரதேச சபை, தெஹியோவிட்ட எனும் பெயருக்கு கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.
04. அனைத்து வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களும் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி, வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி, தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை பதிவு செய்து கொள்ளும் வேளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. தேவைப்பாடுகள் முறையாக அறிவிக்கப்பட்டதன் பின் விலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது கட்டளை விடுக்கப்பட்டதன் பின் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் அல்லது வழங்குநர்கள் குறித்த விபரக்குறிப்பு மற்றும் நியதிகளுக்கு அமைவாக அல்லாதவையாக கவனத்திற் கொண்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும்.
06. ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பிக்கும் பெறுமதியின் அரைவாசிக்குச் சமமான சொத்துக் சான்றிதலொன்றை கோரப்பட்டவுடன் சமர்ப்பிப்பதற்கான இயலுமை இருத்தல் வேண்டும். 1,000,000.00 ரூபாவுக்கு மேற்பட்ட பதிவுகளுக்கு இக்டாட் (ICTAD) நிறுவனத்தில் உரிய தரத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
07. அனைத்து வழங்கல்களுக்காகவும் முற்பணக் கொடுப்பனவை எதிர்பார்ப்பதானால் பதிவு செய்து கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் குறித்த வழங்கல் அல்லது சேவை வழங்கப்பட்டதன் பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
08. விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
09. விண்ணப்பப் படிவங்களை எமது மின்னஞ்சல் (E-mail) ஊடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன் பொருட்டான கட்டணம் பதிவுக் கட்டணத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்த

தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

இராஜேஸ்வரி அறக்கட்டளை நிறுவனத்தின் ஊடாக 'இராஜேஸ்வரி அழகு சோலை' என்னும் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 18 வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அச்செழு பிரதேசத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட விருந்தினராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

வடக்கில் கடும் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மருதமடு குளத்தின் நீர்மட்டம் அதிகரிப்பு
தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

வடக்கு மாகாணத்தில் பெய்து வரும் கடும் மழைகாரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல கிராமங்கள், வீதிகள், வயல்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அதுமட்டுமின்றி சில இடங்களில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி, முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகிய பகுதிகளின் வெள்ளத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக வீடொன்று சேதமடைந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்று வசித்து வந்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

வீட்டில் வசித்தோர் தற்காலிகமாக அங்கிருந்து வெளியேறி வேறு இடத்தில் தங்கியுள்ளனர். இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் தொடர் மழை காரணமாக வீடுகளில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கிருந்து வெளியேறி காக்கை தீவு மீனவர் சங்க கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ் நில பிரதேசங்களில் வெள்ளநீர் புகுந்துள்ளது. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வணிக நிலையங்களுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துகொண்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட கைவேலி,மயில்குஞ்சன் குடியிருப்பு,இரணைப்பாலை,ஆனந்தபுரம் போன்ற தாழ்நிலப்பகுதிகள் வெள்ளநீரினால் நிரம்பியுள்ளன. மழை வெள்ளத்தினால் புதுக்குடியிருப்பு மருதமடு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. 14.5 அடி கொள்ளளவு கொண்ட மருதமடு குளம் நிரம்பி வழிகின்றது.

பாண்டியன் வெளி வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கள்ளியடி வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பேராற்று நீர் பாய்ந்தோடுவதால் சுமார் 1000 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளநீர் தொடர்ந்து மூன்று நாட்கள் நீடிக்குமாயின் பயிர்கள் முற்றாக அழிவடையும் நிலை ஏற்படுமெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் வள்ளிபுனம் பகுதியில் வீதியோரமாக உள்ள பாரிய புளியமரமொன்று சரிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளது. இந்த மரத்தினை அகற்றும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

40 வயதுடைய பெண் ஒருவரும், 35 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் 20 லீற்றர் கசிப்பு , 50 லீற்றர் கோடா, கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

வீட்டில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடைபெறுவதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். முஸ்லிம் சமூக ஜோதி" விருது வழங்கல்

யாழ்.முஸ்லிம் சமூக ஊடகத்தினால் இந்த வருடம் "வாழ்வோரை வாழ்த்துவோம் மூத்தவர்களை வாழ்த்துவோம்" எனும் தொனிப்பொருளில் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் M.S.A.M. முஹ்தார், ஓய்வு பெற்ற ஆசிரியரும் இலக்கியவாதியுமான A.C. நஜுமுத்தீன் ஆகியோரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். முன்னாள் அகில இலங்கை YMMA தேசிய தலைவர் அல்ஹாஜ் M.S. றஹீம், யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி, கலாபூஷணம் பரீட் இக்பால் ஆகியோர் விருது வழங்கலுக்கு அனுசரணை வழங்குகின்றனர்.

பூட்டியிருந்த வீட்டை உடைத்து திருட்டு

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் மேற்கு பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் 01/11 செவ்வாய்க்கிழமை பகல் திருடர்கள் கைவரிசை காட்டியுள்ளனர். கணவனும், மனைவியும் வேலைக்கு சென்றிருந்த வேளையில் வீட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சங்கிலி,தோடு, காப்பு உள்ளடங்கலாக ஐந்தரைப் பவுண் நகையினை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அரச உத்தியோகத்தர்களான வீட்டு உரிமையாளர்கள் இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

யாழ்.அரியாலை தடுப்பணை, மருதங்குளம் புனரமைப்பு பணிகள் நிறைவு

கோப்பாய் குறூப் நிருபர்

வடக்கு நீர்ப்பாசன திட்டங்களை விரைவாக திறனாக்கும் செயற்பாட்டின் கீழ் புனரமைக்கப்பட்ட அரியாலை நீர்தடுப்பணை மற்றும் முல்லைத்தீவு மருதங்குளப் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வட மாகாண நீர்ப்பாசனத்திணைக்களம் மற்றும் இராணுவத்தின் பொறியியல் களப்படையணியுடன் வடக்கில் நான்கு அபிவிருத்தி திட்டங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. சுமார் 13 .5 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும். அபிவிருத்தி திட்டங்களில் அரியாலை நீர் தடுப்பணையின் கீழ் தள வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மருதங்குளத்தின் அணைக்கட்டு பகுதி சீர் செய்யப்பட்டுள்ளது. மழைக்காலம் தொடர்வதால் ஏனைய பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மொத்த திட்டச் செலவில் 50 வீதம் ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது, தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால் ஏனைய அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் உரிய காலத்தில் மீண்டும் தொடர்ச்சியாக திட்டங்கள் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வலி.வடக்கு காணிகளை விடுவிக்க கோரி தெல்லிப்பழையில் போராட்டம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியிலுள்ள காணிகளை விடுவிக்க கோரி நேற்றைய தினம் புதன்கிழமை தெல்லிப்பழையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. வட கிழக்கில் தொடர்ச்சியாக காணி சுவீகரிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்தவகையில் வலி வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி போராடவேண்டிய தேவையுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் ரமேஷ் மாரடைப்பால் மரணம்

இன்று இறுதிக்கிரியைகள்

யாழ்.விசேட நிருபர்

சமூக பணியாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான செல்வராசா ரமேஸ் (வயது 53) மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்றையதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இறுதிகிரியைகள் இடம்பெற்று, நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். உள்ளூராட்சி மன்ற உதவியாளராகவும், சமூக செயற்பாட்டாளராகவும், யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் உள்ளிட்டவற்றில் சுயாதீன ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்துள்ளார். அத்துடன் ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் தலைவராக இருந்தவர்.

நிதியத்தின் ஊடாக குறிப்பிடத்தக்க பல்வேறு சமூக சேவைகளை ஆற்றினார்.

கிழக்கின் குரல்

வாகரையில் பாடசாலை மாணவர் இடைவிலகல் அதிகரிப்பு

பிரதேச செயலாளர் ஜி. அருணன் தெரிவிப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும்பொருளாதார நெருக்கடி காரணமாக வாகரைப் பிரதேசத்தில் பாடசாலைகளுக்கான மாணவர்களின் வருகை 50 சதவீதமாகக் குறைந்து காணப்படுவதுடன், மாணவர்களின் இடைவிலகலும் அதிகரித்துள்ளதாக, வாகரை பிரதேச செயலாளர் ஜி. அருணன் தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில், நலிவுற்ற பெண்கள், சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தி அமுலாக்கத் திட்டத்தின் வெளிப்படுத்துகை பிரதேச மட்ட நிகழ்வு, வாகரை கலாசார மத்திய நிலையத்தில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது,

"எமது பிரதேச செயலகப் பிரிவிலிருந்து அநேகமான தாய்மார்கள், வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாணவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

மாணவர்களுக்கு ஏற்படும் இவ்வாறான பாதிப்புகளைத் தடுப்பதற்காக எம்மால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரப் பிரச்சினைக்கும் போஷாக்குப் பிரச்சினைக்கும் தீர்வு காணும் வகையில், எம்மால் இயலுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனவே, தமது பிள்ளைகளை கட்டாயமாக பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோரும் பாதுகாவலர்களும் முயற்சிக்க வேண்டும்." என்றார்.

உணவுக் கால்வாய் சுருக்கத்தை சீராக்கும் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முன்னெடுப்பு

ரொட்டவெவ குறூப் நிருபர் அப்துல்சலாம் யாசீம்

பெண்ணொருவரின் உணவுக் கால்வாயிலுள்ள சுருக்கத்தை சீர்செய்யும் சத்திர சிகிச்சையொன்று, கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக நேற்று (01) முன்னெடுக்கப்பட்டது.

ஐந்து மணித்தியாலமாக இச்சத்திர சிகிச்சையை திருகோணமலையைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர், டொக்டர் கே.ஜெயந்தன் மேற்கொண்டு சாதனை படைத்துள்ளார்.

கிண்ணியாவைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணொருவரின் உணவுக் கால்வாயில் ஏற்பட்ட சுகவீனத்தை தொடர்ந்து, கடந்த 20 வருடங்களாக கண்டி, கொழும்பு, குருணாகல் போன்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அப்பெண் சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில், கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வந்துள்ளார். இந்நிலையில், இந்நோயாளியை சத்திர சிகிச்சை நிபுணர், டொக்டர் கே.ஜெயந்தன் பரிசோதித்துள்ளார்.

இதன்போது, அப்பெண்ணின் உணவுக் கால்வாயில் சுருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் சத்திர சிகிச்சை மூலம் அதனைச் சீர்செய்ய முடியுமெனவும், சத்திர சிகிச்சை நிபுணர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அப்பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கிண்ணியா தள வைத்தியசாலையில் தொழில்நுட்பம் உள்ளிட்ட வசதிகள் குறைந்து காணப்படும் நிலையில், இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை வரவேற்கத்தக்கதெனவும், கிண்ணியாப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மையவாடி அமைக்க மகஜர் கையளிப்பு

சாய்ந்தமருது விசேட நிருபர்

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் ஜனாஸா மையவாடியொன்றை அமைப்பதற்கு, கல்முனை பிரதேச செயலாளர் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கான காணியை பெற்றுத்தர வேண்டுமெனக் கோரும் மகஜரொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியிடம் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் இஸ்லாமிய ஜனாஸா நலன்புரிச் சங்கச் செயலாளருமான எம்.எஸ்.எம்.நிஸார் இம்மகஜரைக் கையளித்துள்ளார்.

மேற்படி வீட்டுத்திட்டத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் அவர்களின் இறுதி நல்லடக்கத்துக்கான மையவாடி இல்லாமையினால் பல சிரமத்தை அம்மக்கள் எதிர்நோக்கி வருவதாகவும், இஸ்லாமிய ஜனாஸா நலன்புரிச் சங்கச் செயலாளர் எம்.எஸ்.எம்.நிஸார் தெரிவித்தார்.

அதிகஷ்டப் பாடசாலையில் 5 வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

ரொட்டவெவ குறூப் நிருபர் அப்துல் சலாம் யாசிம், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

அதிகஷ்டப் பாடசாலையில் 5 வருடங்கள் கடமையாற்றிய தமக்கு இதுவரையில் இடமாற்றம் வழங்கப்படவில்லையெனக் கூறி, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நேற்று (02) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

5 வருடங்களாகக் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதாகக் கூறி, எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கான இடமாற்ற விண்ணப்பப்படிவம், கடந்த ஜூலை 31ஆம் திகதி பெறப்பட்டது.

ஆனால், தற்போது 6 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும் 200 கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து வருகை தந்து, அதிகஷ்டப் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவதாகவும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அதிகஷ்டப் பாடசாலைகளில் 5 வருடங்கள் கடமையாற்றிய தமக்கு இடமாற்றம் வழங்கப்படாமை மன வருத்தத்தை ஏற்படுத்துவதாகவும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆகவே, கடந்த 5 வருடங்களாக அதிகஷ்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றத்தை வழங்குமாறும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் புள்ளிநாயகத்திடம் வினவியபோது, இன்னும் எவருக்கும் இடமாற்றம் வழங்கப்படவில்லை. தற்போது தரவுகள் மாத்திரம் பெறப்பட்டு வருவதாகவும், அவர் கூறினார்.

ஆலையடிவேம்பில் பல்கலைக்கு தெரிவான 77 மாணவர்கள் கௌரவிப்பு

வாச்சிக்குடா விசேட நிருபர் வி. சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து இவ்வருடம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று சாயிசமித்தி நிலையத்தின் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 77 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஆலயங்களானவை சமயப் பணிகளுடன் சமூகப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் எனும் அடிப்படையில், ஆலய உண்டியல் வருமானத்தில் மூன்றிலொரு பகுதியை சமூகப் பணிகளுக்காக ஒதுக்கியுள்ளதாக, ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தலைவர் வி.சுகிர்தகுமார் தெரிவித்தார்.

அதிலும் கல்வி அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்குவது எனும் தீர்மானத்துக்கமைய மேற்படி மாணவர்களை கௌரவிப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

மட்டு. ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 4ஆம் திகதி

கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மிக நீண்ட காலத்தின் பின்னர் எதிர்வரும் 4ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டச் செயலாளர் கே.கருணாகரனின் ஏற்பாட்டிலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

கொவிட் 19 நிலைமை, நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக நீண்டகாலமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறாமலிருந்து வந்த நிலையிலேயே, இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்போது கடந்த காலங்களில் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள், உணவுப் பாதுகாப்பு குறித்த கிராமப் பொருளாதார மறுமலர்ச்சி தேசிய வேலைத்திட்டம், மட்டக்களப்பின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு, புதிய திட்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்தல் (2022) போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

அனர்த்தங்களை எதிர்கொள்ளும் முன்னாயத்தச் செயற்பாடுகள்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறையில் பருவகால மழை ஆரம்பித்துள்ளதால், அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கான முன்னாயத்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு இது தொடர்பாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடகீழ் பருவகால பெயர்ச்சி மழை எதிர்காலத்தில் அதிகமாகப் பெய்யும் பட்சத்தில், அதனால் ஏற்படுகின்ற அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டம், நிறுவன ரீதியான அனர்த்த அபாய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் சமூக மட்ட அனர்த்த அபாய முகாமைத்துவத்தை செயற்படுத்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

மேலும் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்களை வலுப்படுத்துதல்.

மழை வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களை அடையாளம் காண்பதுடன், வெள்ளம் ஏற்படுவதற்கான மூல காரணங்களை அடையாளம் கண்டு, அதனை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை உரிய திணைக்களத்தினூடாக முன்னெடுக்க வேண்டுமென்று உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலைமையின்போது பாதிக்கப்படும் மக்களுக்கு 6 மணித்தியாலத்துக்குள் அவசர பதில் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், அனர்த்த அபாய குறைப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை கிராமிய மற்றும் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை விவசாயிகளுக்கு 2ஆம் கட்டமாக உரம் வழங்க ஏற்பாடு

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அட்டாளைச்சேனையில் பெரும்போக விவசாயிகளுக்கு இரண்டாம் கட்டமாக இரசாயன உரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அப்பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.சம்சுடீன் தெரிவித்தார்.

இவ்விவசாயிகளுக்கு முதலாம் கட்டமாக ஒரு கிலோகிராம் உரம் 200 ரூபாய் படி, ஏக்கரொன்றுக்கு 14 கிலோகிராம் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டது.

இந்நிலையில், அட்டாளைச்சேனை கமநலப் பிரிவிலுள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளுக்கான உரம் வழங்கும் நடவடிக்கை 11 கமக்கார அமைப்புக்களூடாக முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக, ஏக்கரொன்றுக்கு 21 கிலோகிராம் உரமானது, ஒரு கிலோகிராம் 200 ரூபாய் எனும் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

விவசாய அமைச்சுச் செயலாளரின் அனுமதியைத் தொடர்ந்து, உரத்துக்கான பணத்தை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கமக்கார அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்தில் ஏக்கரொன்றுக்கு மொத்தம் 63 கிலோகிராம் இரசாயன உரம் 3 கட்டங்களில் வழங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டத்தை தொடர்ந்து, விவசாய அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய, மூன்றாம் கட்டமாக உரம் வழங்கும் நடவடிக்கை இடம்பெறுமெனவும், அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் சலுகை விலையில் வழங்கப்படும் உரத்தை விவசாயி ஒருவர் உச்சபட்சமாக 5 ஏக்கருக்கு மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கமநலப் பிரிவில் பெரும்போக நெல் விதைப்பு கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நவம்பர் 15ஆம் திகதி முடிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் விவசாயிகளுக்கு அதிகாரிகளினால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

வாழைச்சேனை தனியார் பேருந்து சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பு

கல்குடா தினகரன் நிருபர்

வீதிப் போக்குவரத்துப் பயணிகள் அதிகார சபைக்குட்பட்ட வாழைச்சேனை தனியார் பேருந்துச் சாரதிகள், வாழைச்சேனையில் நேற்று (02) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் காரியாலயத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில், தங்களுக்கு சுழற்சி முறையில் பேருந்துகளைச் செலுத்த ஏற்பாடு செய்யுமாறு, வாழைச்சேனை தனியார் பேருந்துச் சாரதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் இதற்குரிய ஏற்பாடு செய்வதாக மாவட்டப் பணிப்பாளர் வாக்குறுதியளித்த போதிலும், அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லையென இவர்கள் கூறினர்.

இந்நிலையில், வாழைச்சேனை தனியார் பேருந்துச் சாரதிகள் தரிப்பு நிலையத்துக்கு வந்த திருகோணமலை வீதிப் போக்குவரத்துப் பயணிகள் அதிகார சபையின் பணிப்பாளர், அவர்களுடன் கலந்துரையாடியதுடன், எதிர்வரும் 8ஆம் திகதிக்குள் இதற்குரிய ஏற்பாடு செய்வதாகவும் வாக்குறுதியளித்தார். இவ்வாக்குறுதியைத் தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பை வாழைச்சேனை தனியார் பேருந்துச் சாரதிகள் கைவிட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளராக அப்துர் ரசாக்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அம்பாறை மாவட்ட தமிழ் பட்டறை இலக்கியப் பேரவையின் உப செயலாளரும் 'பெருவளி' சஞ்சிகையின் பிரதம செயற்பாட்டாளரும் உப அதிபருமான எம்.அப்துர் ரசாக் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றுச்செல்வதை கௌரவித்து பாராட்டும் நிகழ்வு அண்மையில் ஒலுவில் பரன் தோட்ட வளாகத்தில் நடைபெற்றது.

சிறந்த ஆளுமையும் ஆற்றலும் நிறைந்த அப்துர் ரசாக்கின் சிறப்பு இயல்புகள் பற்றியும் ஆசிரியராக இருந்து அவர் புரிந்த சாதனைகள் பற்றியும் பேராசிரியர்கள் உரையாற்றினர். அக்கரை குத்தூசினால் ஆக்கப்பட்ட கவிதை பாராட்டு பத்திரமும் வாசித்து வழங்கப்பட்டது. விரிவுரையாளர் அப்துர் ரசாக், வைபவ இறுதியில் அமெரிக்காவில் பணியாற்றும் பட்டயக்கணக்காளர் எ. அமீனால் மாலையிட பிரதம அதிதி சிறப்பு அதிதிகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

106

கார்கள் விற்பனைக்கு

WP KQ-9413 Tata Nano, 2011, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958 . 066387

112

மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

WP CAW-6796 Mazda Flair, 2014, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 066378

118

ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

WP HU-1991 Mitsubishi Pajero, 2000, கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 066382

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP JG-4396 Mazda Titan, 2000, lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 066373

68-2389 Mitsubishi, 1993, lorry கூடிய விலைக் கோரிக்கை க்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958 . 066380

122

மோட்டார் சைக்கிள், திரிவீலர்கள் விற்பனைக்கு

CP YP-2028 Bajaj, 2011, CP QK-7526 Bajaj, 2007, SP GZ-441 5 Bajaj, 2002, Threewh e el கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10 810 . 066385

WP AAG-5410 Bajaj, 2012 , NC ABQ-8046 B a jaj 2017, Thre e w h eel கூடிய விலை க் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 071 1 2 10 810 . 066386

WP B I Y- 5451 TVS Weg o , 2020, mot o r cycl e கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10 810 . 066370

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

2022 ம் ஆண்டுக்கான தேசிய தமிழ்த்தின விழா

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய தமிழ்த்தின விழா நிகழ்வுகள், கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரண சிங்க தலைமையில், 2022.11.05 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பம்பலப்பிட்டி இந்து கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. இரு தினங்களாக நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தோட்டத்தில் பயிரிடப்பட்ட

மரக்கறிகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும்

(வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்)

உஹன பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்திற்கு நிதி சேகரிக்கும் முகமாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தங்கள் தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் சந்தைக் கூடம் கடந்த 31ஆம் திகதி உஹன பிரதேச செயலகத்தில் நடைபெற்றது . உஹன பிரதேச செயலாளர் சி.யு. நாணயக்கார, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம். முஹம்மட் சப்ரி ஆகியோர் சந்தையை பார்வையிட்டனர். பிரதேச செயலாளர் பொருட் கொள்வனவு செய்து ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சிங்கள மொழித் தினம்

ருஸைக் பாரூக்

கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி சிங்கள இலக்கியச் சங்கம் ஒழுங்கு செய்த சிங்கள மொழித்தின வைபவம் அண்மையில் கல்லூரி ஹாஜரா மண்டபத்தில் அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸ் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிங்கள மொழித் தின போட்டியில் பங்குபற்றிய மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இவ்விழாவில் மாணவியர்கள் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளை வழங்கினர்.

மேலும் அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸ், பிரதம அதிதி பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ரஸ்மியா அபூபக்கர், அகீதா நுஹ்மான், சிங்கள இலக்கியச் சங்க பொறுப்பாசிரியர் நிராஷா கமகே மற்றும் மிதுமி டி சில்வா, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மாவட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் ஷாதுலிய்யா வித்தியாலயம் சாதனை

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் கடந்த வாரம் ஏறாவூர் அஹமத் பரீட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 17 பாடசாலைகள் கலந்துகொண்டன. இதில் பிறைந்துரைச்சேனை ஷாதுலிய்யா வித்தியாலயம் சார்பில் 16 வயதுக்குட்பட்ட அணியினர் சாம்பியன் பட்டத்தை பெற்றதுடன் முதல் முறையாக அந்த பாடசாலை வரலாற்றில் தேசிய மட்ட போட்டிகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் அதே பாடசாலை சார்பில் 14 வயதிற்குட்பட்ட அணியினர் இறுதிப்போட்டிவரை சென்று 02 ம் இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த பாடசாலை அணியினருக்கும், பாடசாலை சார்பில் அணியினை நெறிப்படுத்திய விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான ஏ.எம்.எம். இர்பான், ஏ.எம்.எம். மபாஸ் மற்றும் பீ.எம் ஜமீல் கபூரி ஆகியோருக்கு பாடசாலை முதல்வர் திரு.கலீலுர் ரஹ்மான் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

கலாபூஷண விருதுக்கு கலைஞர்கள் தெரிவு

திறப்பணை தினகரன் நிருபர்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்படும் கலாபூஷண விருது வழங்கல்களுக்காக கலைஞர்களை தெரிவு செய்யும் நிகழ்வுகள் நாடு முழுவதும் இப்போது இடம்பெற்று வரும்நிலையில், அநுராதபுரம் மாவட்டத்தின் விருதுக்குரியவர்களை தெரிவு செய்யும் குழு ஆய்வு கடந்த 01 ம் திகதி அநுராதபுரம் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அநுராதபுரம் மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் இவ்வாறு தேசிய விழாவிற்காக மாவட்டத் தெரிவு குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம் முறை 38 வது கலாபூஷண விருது வழங்கும் விழா நடை பெறவுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள கடற்பரப்புகள் நேற்றைய தினம் (2) காலை தொடக்கம் கடல் அலைகள் கடும் பச்சை நிறத்தில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அச்சம் அடைந்தனர். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

விலைமனுக் கோரல்

செயற்படும் குத்தகை முறையின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சார்பில் அமைச்சின் பெறுகை குழுவின் தலைவர், கீழே காட்டப்பட்டுள்ளவாறு செயற்படும் குத்தகை முறையின் கீழ நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு வாகனங்களை வழங்குவதற்காக தகுதியான மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கோரியுள்ளார்.

நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

வாகன வகை : 09 மோட்டார் கார்கள் மற்றும் 03 டபிள் கெப் வண்டிகள்

வாகன நிலை : பணியமர்த்தப்படும் இடத்தில் 100,000 கிமீக்கும் குறைவான மைலேஜ் கொண்ட வாகனங்கள்.

ஒப்பந்த காலம் : 36 மாதங்கள்

தகுதியான வழங்குநர்கள் : வாகன முகவர்கள் (உலகப் புகழ்பெற்ற வாகன பிராண்ட்களின் உரிமையாளர்கள்): மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள், குறைந்தபட்சம் 10 வாகனத் தொகுதியைக் கொண்ட வாடகைக் கார் சேவைகள்.

வழங்கப்பட வேண்டிய சேவைகள் : வருடாந்த உரிமம், உமிழ்வு சோதனை மற்றும் காப்புறுதி உட்பட அனைத்து வழக்கமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளை குத்தகைதாரர் ஏற்க வேண்டும்.

வாகனங்களை பதிலீடு செய்தல் : பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 24 மணி நேரத்திற்கும் மேலாக இருந்தால், அதே வகை வாகனம் வழங்கப்பட வேண்டும்.

வாகன விவரங்கள்

Lot லொட்	வாகனங்கள் வகை	வாகனங்களெனின் எண்ணிக்கை	திருப்பி செலுத்தப்படாத கட்டணம்	விலைமனு பாதுகாப்பு	விலைமனு பாதுகாப்பு செல்லுபடியாகும்
லொட் A	மோட்டார் கார்	09	10,000.00	மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 1.0% (வெட் இன்றி 36 மாதங்கள்)	2023.03.23
லொட் B	டபள்கெப்	03	3,500.00		2023.03.23

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையில் 2022.11.23 வரை தொடர்பு இலக்கங்கள் 011-2484538/011-2484600 (நீடிப்பு: 1430) மூலம் கணக்காளர் (வழங்கல்), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, செயலகம். கொழும்பு- 01 மேலதிக தகவல்களைப் பெறலாம். விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுப்பை 2022.11.03 முதல் 2022.11.23 வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பிரதான கணக்காளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவுகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சிறாப்பருக்கு பணமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

விலைமனுக்கள் மேல் தரை தளம், திறைசேரி புதிய கட்டிடம், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் நிதிப் பிரிவில் உள்ள டெண்டர் பெட்டியில் வைப்புச் செய்யப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரி மூலம் லோட்டஸ் வீதி கொழும்பு- 01 இல் அமைந்துள்ள தலைவர், அமைச்சின் பெறுகைக் குழு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 2022.11.24 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னதாக சென்றடையும் வகையில் அனுப்ப வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக கொழும்பு- 01 லோட்டஸ் வீதியில் உள்ள பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தளமாடியிலுள்ள நிதிப் பிரிவில் ஏலதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும்.

2022 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கொழும்பு- 01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் நிதிப் பிரிவு மேல் தரைத்தள புதிய கட்டிடம், கொழும்பு- 01 இல் விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் நடைபெறும்.

தலைவர்,
அமைச்சின் பெறுகைக் குழு,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
லோட்டஸ் வீதி,
கொழும்பு- 01.
2022.11.03

கைத்தொழில் அமைச்சு
"லக்சல"
இலங்கை கைப்பணிகள் சபை

LAKSALA

வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரல் – 2023

1. *பாதுகாப்பு சேவை (Security Servies)*
2. *சுத்திகரிப்பு சேவை (Cleaning Servies)*
3. *மனிதவள சேவை (Manpower Servies)*

இலங்கை கைப்பணிச் சபை - லக்சலவுக்கு வெளியிலிருந்து சேவையைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் மேற்படி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைகளை இலங்கை கைப்பணிச் சபை (நிர்வாகப்பிரிவு) இல. 215, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07, என்ற முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை 2022.11.03 முதல் 2022.11.23 வரை மீளளிக்கப்படாத ரூ. 1000/- கேள்விக் கட்டணத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2022.11.23ம் திகதி விண்ணப்பங்கள் விநியோகித்தல்/ ஏற்றுக் கொள்ளல் இடம் பெறுவது பி.ப. 1.30 வரை மட்டுமே. அதனடிப்படையில் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2022.11.23 பி.ப. 1.30 இற்கு முடிவடைவதுடன் அத்தினத்திற்கு முன் பதிவுத்தபாலில் கிடைக்குமாறு அல்லது கீழ்க்காணும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த தினத்தின் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்களை ஒப்படைத்தல் முடிவடைந்தவுடன் அன்றே பி.ப. 1.30 இற்கு அவ் விலைமனுக்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கீழ்க்காணும் முகவரியில் அவ்வேளையில் சமுகமளிக்கலாம். மேற்படி சேவைக்காக நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுக்கும் இறுதித் தீர்மானம் இச்சபைக்கு உரியது.

பொருள் வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2023

இலங்கை கைப்பணிகள் சபைக்கு 2023ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வகுதி (A) - காகிதாதிகள்
02. வகுதி (B) - பொருட்களை கொள்வனவு செய்தல்
03. வகுதி (C) - சேவைகளை பெற்றுக் கொள்ளல்
04 வகுதி (D) - சிவில் நிர்மாணம்/உள்ளக அலங்கார விடயங்கள்

2022.11.03 முதல் 2022.11.23 வரை வாரத்தின் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை இல. 215, பௌத்தாலோக்க மாவத்த, தும்முல்ல, கொழும்பு- 07 இல் வசிக்கும் இலங்கை கைப்பணிகள் சபையின் நிர்வாகப் பிரிவிலிருந்து மேற்படி (A), (B), (C), (D) வகுதிகளில் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 1000/- வீதம் பதிவுக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் முறையாகப் பூர்த்தி செய்து 2022.11.26ம் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்க முடியும் அத்துடன் விண்ணப்பங்கள் உள்ளடக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்தல் - 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை கைப்பணிகள் சபை - லக்சல,
இல. 215, பௌத்தாலோக மாவத்த,
கொழும்பு - 07.
தொலைபேசி இலக்கம் 011-2557132

காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் KDS/PAN/04/04/02/40

காணி அமைச்சு இல 4-3/2/2037/CEB/325

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.08.27ஆம் திகதி 2294/73ஆம் இலக்க விஷேட அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	: மத்திய மாகாணம்
மாவட்டம்	: கண்டி
பிரதேச செயலாளர் பிரிவு	: பன்வில
கிராம சேவகர் பிரிவு	: இல. 736 பெத்தேகம
கிராமம்	: பெத்தேகம
காணியின் பெயர்	: பல்லேஹேவனி லேகுபுர ஹெவத் கரனிலே குபுர கலேபொக்க கலேபொக்க பல்லேஹேவானிலே குபுர ஹெவத் குபுரே கெதரயாயே குபுர
வரைபட இலக்கம்	: மு.பி.மஹா 7071
துண்டு இலக்கம்	: 1, 2, 3
மொத்த விஸ்தீரணம்	: ஹெக்டயார் 0.1300

நிரஞ்சன் ஸ்ரீமந்த சேனாதீர
பிரதேச செயலாளர்
பன்வில பிரிவு

2022.09.08ஆம் திகதி
பன்வில பிரதேச செயலகத்தில்

வலுசக்தி அமைச்சு
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

THIRD PARTY INSPECTION FOR DRY DOCKING OF CRUDE OIL SPBM 01

B/58/2022

DRY DOCKING OF CRUDE OIL SPBM 01 இன் மூன்றாம் தரப்பு ஆய்வுக்காக IACS (International Association of Classification Society) உறுப்பினர்களாகவுள்ள ஆய்வு நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அமிர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறுதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவத்திற்கான்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 3,000.00 ரூபாவை (ரூ. 2,545.07 + 2.5% SSCL + 15% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-11-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 80,000.00 ரூபா தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-11-23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்பித்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை உதவி முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-5455335 அல்லது மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk

தலைவர்,
நிதைக்கள பெறுகைக் குழு,
மேலா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),
பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு-09.
தொலைபேசி: 0094-11-5455331, தொலைநகல்: 0094-11-5455424

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விவசாயத் திணைக்களத்தின் விவசாய டிப்ளோமா பாடநெறிக்கு (NVQ 6) சேர்த்துக்கொள்ளும் போட்டிப்பரீட்சை – 2022

மேற்படி பரீட்சை 2022.11.12ம் திகதி இலங்கை விவசாயக் கல்லூரி - குண்டசாலை பெல்வெஹெர, அங்குணகொல பெலஸ்ஸ, வவுனியா, அநுராதபுரம், லபுதுவ, வாரியபொல, பாலமுனை மற்றும் பேராதனை, விவசாயத் திணைக்களம் ஆகிய பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளன.

2022.11.01ஆம் திகதி ஆகியும் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அலுவலக நேரங்களில் விவசாயத் திணைக்களத்தின் கீழ்க்காணும் இலக்கங்களுக்கு உடன் அழையுங்கள்.

081-2388085/081-2388059

இப்போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் நவம்பர் மாத கடைசி வாரத்தில் விவசாயத் திணைக்கள இணையத்தளத்தில் (www.doa.gov.lk) மாத்திரம் பிரசுரிக்கப்படும் அதுபற்றிய கவனத்துடன் இருத்தல் வேண்டும்.)

மேற்படி புள்ளிகளை கவனத்தில் கொண்டு நேர்முகத்தேர்விற்கு தகைமையான விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியல் டிசம்பர் முதலாம் வாரத்திற்குள் திணைக்கள இணையதளத்தில் பிரசுரிக்கப்படும் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகத்தேர்வு டிசம்பர் 4 ஆம் வாரத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதுபற்றி நேர்முகத்தேர்விற்கு தகைமைகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம், மின்னஞ்சல் மூலம் மற்றும் Whatsapp மூலம் அறிவிக்கப்படும். இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்ட தகைமை பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்விற்காக கோரப்படவில்லையாயின் 081 -2388340 / 081-23888341 இலக்கங்களுக்கு உடனடியாக அழைத்தல் வேண்டும்.

ருவன்வெல்ல பிரதேச சபை
2023ஆம் ஆண்டுக்காக பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்கலுக்காக பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்ற ஒப்பந்ததாரர்கள்/ அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ அமைப்புகள்/ வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனைத்து விண்ணப்பங்களும் தமது நிறுவன (இருக்குமானால்) முகவரி மற்றும் ஏனைய விபரங்களுடன் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பின்வரும் வடிவத்திற்கு அமைய குறித்த விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையில் "வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவுசெய்தல் - 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து வழங்கல் மற்றும் சேவைகளுக்காக 1000.00 ரூபா தொகையை பதிவுசெய்தல் விண்ணப்பப் படிவக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்பதோடு, அதற்காக "தலைவர், பிரதேச சபை, ருவன்வெல்ல" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை ஒன்றை உங்களது விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து வழங்குநர்களும் ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குறிப்பிடப்படும் இடங்களுக்கு பொருட்களைக் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதை பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்ற வழங்குநர்களிடம் சுட்டிக்காட்டுகிறோம்.

அனைத்து ஒப்பந்ததாரர்களும் 1000.00 ரூபா தொகையை பதிவுசெய்தல் விண்ணப்பப் படிவக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்பதோடு, விண்ணப்பிக்கின்ற ஒப்பந்த பெறுமதிக்கு நிகரான பெறுமதிச் சான்றிதழ் பிரதேச செயலாளர் மூலம் பெற்றுக்கொண்டு விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (ICTAD) நிறுவனத்தின் பதிவு ஒப்பந்ததாரர்கள் பெறுமதிச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தேவையில்லை.

01. பொருட்கள் வழங்கல்

1. அலுவலக காகிதாதிகள், நுகர்வுப் பொருட்கள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் வழங்கல்
2. அலுவலக இயந்திர சாதனங்கள், தட்டச்சு, ரோணியோ இயந்திரம், நகல் பிரதி இயந்திரம், கூட்டல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் என்பவற்றை வழங்குதல்
3. ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் அது தொடர்பான உதிரிப்பாகங்கள் வழங்குதல்
4. கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல்
5. அலுவலக உபகரணங்கள் (மரப்பலகை, பிளாஸ்டிக் மற்றும் உருக்கு) வழங்குதல்
6. மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், வளிச்சீராக்கி இயந்திரம் வழங்குதல்
7. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டீசல்/ பெற்றோல்) வழங்குதல்
8. டயர், டியூப் மற்றும் மின்கலம் வழங்குதல்
9. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை மற்றும் பெயர் பலகை தயாரித்தல் மற்றும் வழங்குதல்
10. பதக்கம், இலச்சினைகள், கிண்ணங்கள் தயாரித்தல் மற்றும் வழங்குதல்
11. சிறுவர் பூங்கா உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்
12. துணி வகைகள் (சீருடை/ மேசை விரிப்பு/ திரைச்சீலைக்காக) வழங்குதல்
13. தீயணைப்பு உபகரணங்கள் பொருத்துதல், பராமரிப்பு மற்றும் சேவை வழங்குதல்
14. தகரக் கூடாரம், உற்சவப் பொருட்கள் வழங்குதல்

02. நிர்மாணப் பொருட்கள் வழங்கல்

1. மோட்டார் வாகன திருத்தவேலைகள் (டீசல் மற்றும் பெற்றோல்) மோட்டார் வாகன தகடு வேலை மற்றும் நிறப் பூச்சு வேலை
2. வாகன பராமரிப்பு சேவை (அதிகார எல்லைக்குள் அல்லது அதற்கு அருகாமையில் அமைந்திருத்தல் வேண்டும்)
3. மோட்டார் வாகன குஷன் வேலை மற்றும் ஹூட் வேலை, வாகன சேவை வழங்கல்
4. அலுவலக இயந்திர சாதனங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவை வழங்கல் (தட்டச்சு, கூட்டல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம், வானொலி இயந்திரம், கணனி இயந்திரம், அச்சு இயந்திரம், ஸ்கேன் இயந்திரம் ஆகியவற்றின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
5. கணனி மென்பொருள் (Software) சேவை வழங்கல்
6. அச்சு சேவை மற்றும் டைப் செட்டிங் செயற்பாடுகள்
7. கடைசல் பட்டறை வேலைகள், உருக்கியொட்டல் வேலை
8. மின் திருத்தவேலைகள் (AC/DC) வாகனம்
9. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் மற்றும் சேவை வழங்கல் (அலுவலகம்/ வாகனம்)
10. தோட்ட அலங்காரம்
11. அலுவலக சுற்றாடலை சுத்திகரித்தல் மற்றும் பராமரிக்கும் செயற்பாடு
12. விருந்தோம்பல் செயற்பாடுகளுக்காக தேவையான சேவை வழங்கல் (Catering Service)
13. கற் சிற்ப வேலை (ஞாபகச் சின்னங்கள் ஆகியன)
14. மொழிபெயர்ப்பாளர் சேவை
15. சட்டத்தரணிகள் சேவை
16. அளவையாளர் சேவை

ஒப்பந்ததாரர்கள்

நிதி எல்லை	பதிவுக் கட்டணம் (வரிகள் உட்பட)
1. ரூபா 500000.00 வரை	ரூபா 2000.00
2. ரூபா 1000000.00 வரை	ரூபா 3000.00
3. ரூபா 10000000.00 மேல்	ரூபா 5000.00

04. நிபந்தனைகள் :-

1. மேற்படி வழங்கல்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் ஒவ்வொரு வகைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அதற்காக வெவ்வேறான விண்ணப்பப்படிவக் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.
2. பதிவு செய்வதற்கான தகைமையைக் கொண்டுள்ள எந்த ஒரு வழங்குநருக்கும்/ஒப்பந்ததாருக்கும் முன்வர முடியும் என்பதோடு, சமர்ப்பிக்கப்படுகின்ற கூறுவிலைகள் பொதுவாக 06 மாத காலத்திற்குள் மாறாத நிலையான தன்மையுடன் இருத்தல் வேண்டும்.
3. தேவையென உணரப்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களுக்குப் புறம்பாக வேறு வழங்குநர்களிடமிருந்து/ ஒப்பந்ததாரர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கூறுவிலைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை ருவன்வெல்ல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் வழங்குநர்கள் 30 நாள் கால எல்லைக்காக கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க இணங்குதல் வேண்டும்.

05. ருவன்வெல்ல பிரதேச சபையில் பதிவு செய்யப்படுகின்ற வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களுக்கு இருக்க வேண்டிய தகவுத்திறன்.
   1. ஒவ்வொரு சேவைக்காகவும் வெவ்வேறாக வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
   2. ஒரு வழங்குநர்/ ஒப்பந்ததாரர் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான சேவைக்காக பதிவுசெய்ய வேண்டியிருந்தால் ஒவ்வொரு சேவைக்காகவும் பதிவுசெய்தல் விண்ணப்பப் படிவ கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
   3. வழங்குநர்/ ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்வதன் மூலம் சபைக்கு வழங்க வேண்டிய சேவைகளை அவர்களிடம் மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உரிமை அவர்களுக்கு இருக்கக் கூடாது.
   4. பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது குறித்த பொருட்கள் அல்லது சேவைகளை பெற்றுக்கொள்வது யாரிடம் என்பதைத் தீர்மானிக்கும் மதிப்பீட்டு குழுவொன்றின் பரிந்துரைக்கு அமைய விலைமனுக் குழுவினால் மற்றும் தலைவர் மூலம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் தீர்மானிக்கப்படும்.

தலைவர்
ருவன்வெல்ல பிரதேச சபை

பிரதேச சபை அலுவலகம், ருவன்வெல்ல.
0362266275, 0362267275

ருவன்வெல்ல பிரதேச சபை
2023ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. வழங்குநர் பெயர் :- .....
2. முகவரி:- .....
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:- ..... தொலை நகல் இலக்கம் .....
4. தொலைபேசி இலக்கம்:- .....
5. வழங்கல் மேற்கொள்ளப்படும் பொருட்கள் / சேவைகள்
   I. .....
   II. .....
   III. .....
6. பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் தொடர்பில் உள்ள அனுபவம்:-
   .....
   .....
7. இக்டாட் பதிவிலக்கம் / வியாபாரப் பதிவிலக்கம்:-
   .....
8. பதிவுக் கட்டணம் :- ..... (ஒரு வீடயத்திற்கு ரூபா 1000.00 வீதம்)
9. காசோலை இலக்கம் :-..... திகதி:- .....
10. மேற்படி விபரங்கள் சரியானது என்றும், குறித்த பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தேசிய ஆளடையாள அட்டையின் நிழற்பிரதி ஒன்றை இத்துடன் இணைத்திருக்கிறேன் என்றும், இங்கு உறுதி செய்கிறேன்.

திகதி:- ..... கையொப்பம்:- .....

எனது இல: BD/PS/LND/4/1/16

காணி சுவீகரித்தல் சட்டம் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணி துண்டுகள் அந்த சட்டத்தின் 9வது பிரிவின் கீழ் உரிமைகோரல் மற்றும் இழப்பீட்டு விசாரணைகளுக்காக 2022.10.20ஆம் திகதி பசரை பிரதேச செயலகத்தில் என்னால் நடத்தப்படுவதாக மக்களுக்கு அறிவிக்கின்றேன். இந்த காணிகளுடன் தொடர்புடையவர்கள் இந்த விசாரணைகளுக்கு சமுகமளிக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு 10 மாதம் 21ஆம் திகதிய 2302/36 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

பிரதேச செயலாளர் பிரிவு	:-	பசரை
வரைபட இல.	:-	ப 777
காணி துண்டு இல	:-	1
விஸ்தீரணம்	:-	ஹெக் 0.0006
கிராமத்தின் பெயர்	:-	பசரை நகரம்

எஸ்.ஜே.டீ. அநுராதா
பிரதேச செயலாளர்,
பசரை.

2021 09 மாதம் 21 திகதி
பசரை பிரதேச செயலாளர் செயலகம்

காணி கையகப்படுத்தும் சட்டம்
(460 ஆம் அத்தியாயம்)
7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: DIVWE/LAN/ACQUI/05/19
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/7/2020HW/167

காணி கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் கீழ் குறிப்பிட்டுள்ள உப பிரிவின் கீழ் குறிப்பிடும் காணிக்கு உரிமை கோருவோருக்கு காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டுப் பரிசோதனை 30.11.2022 ஆம் திகதி 9.30 மு.ப முதல் வீரம்புகெதர பிரதேச செயலகத்தில் நடைபெறும் எனவும் என்னால் அறிவிக்கப்படும் திகதியில் அப்பரிசோதனைக்காக வருகை தருமாறு பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இதன் மூலம் அறியத்தருகின்றேன் மேலதிக விபரங்களுக்கு இல. 2296/21 உடைய 08.09.2022 திகதியின் அரசாங்கத்தின் விசேட வர்த்தமானி பத்திரிகை அறிவித்தலை பார்க்கவும்.

உப ஆவணம்

மாவட்டம்	:	குருணாகல்
பிரதேச செயலாளர் பிரிவு	:	வீரம்புகெதர
கிராம உத்தியோகத்தர் பிரிவு	:	இல.857, அல்கம
கிராமம்	:	களுந்தாகெதர
இடத்தின் பெயர்	:	தேக்கவத்த குன்கலமுல்லேகும்புர, சியம்பல்கஹா முலகும்புர, தேக்கவத்த குன்கலமுல்லேகும்புர, குன்கலமுல்லேகும்புர மற்றும் இன்னும் பல
வரைபட இலக்கம்	:	இறுதிக்கிராம வரைபட இல.1498, துணை இல.03 தாள் இல.03
துண்டு இலக்கங்கள்	:	124 இருந்து 132

ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க
பிரதேச செயலாளர் மற்றும்
காணி கையகப்படுத்தும் அதிகாரி
வீரம்புகெதர

பிரதேச செயலாளர்,
வீரம்புகெதர
31.10.2022

இலங்கை வங்கி
ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை விநியோகிப்பதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து / விநியோகஸ்தர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர இல	P/PROC/2022/291
பண்டம் / சேவைகளின் விபரம்	2023ஆம் ஆண்டிற்கான தரம் ஒன்று மற்றும் முன்பள்ளியருக்கான பரிசுப்பொருட்களின் கொள்வனவு

விபரம்	எண்ணிக்கை	பிணை முறியாக (ரூ.)
01 - நல்ல தரமான உண்டியல்கள் அல்லது அழிரப்பர் உள்ளடங்கலான பென்சிற் பைகள் அல்லது சீவுளி அல்லது பொருத்தமான பரிசுள்	100,000	187,500/-
02 - பாடசாலை நினைவுப் புத்தகம்	50,000	337,500/-
03 - சித்திரப் புத்தகம்	40,000	600,000/-
04 - பெண்களுக்கான குடைகள் அல்லது பொருத்தமான பரிசுகள்	13,000	195,000/-
05 - பாடசாலை அதிபர்களுக்குப் பொருத்தமான பரிசுகள்	3,000	112,500/-
மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம்	ரூபா.15,334.00 (ரூ.13,000.67 + ரூ.333.33 SSCL + ரூ.2,000.0 VAT)	
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும்	2022.11.16 1500 மணி வரை	
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம்	0900 மணி முதல் 1500 மணி வரை	
ஏலவிலை கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும்	2022.11.17 1000 மணி வரை	
ஏலவிலை கூறல் திறக்கும் காலம்	ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன்	
முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும்	2022.11.10ஆம் திகதி 1000 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகக் கட்டடத்தின் 03ஆம் மாடியில் இடம்பெறும்	

1. விலைகூறல் ஆவணத்தொகுதியை இலங்கை வங்கியின் 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.
2. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து பெற்றதும் இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் 2023.03.16ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதமாக / பிணை முறியாக இணைத்து அனுப்ப வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பண வைப்பு / வங்கிக் கட்டண ஆணை / வங்கி வரைவு என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும் ஏலவிலை கூறுவோரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
3. கேள்விப் பத்திரங்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

தமுத்தேகம கொத்மல்புர பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் விவசாயி ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக தமுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 31 ஆம் திகதி இரவு கொத்மல்புர வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தமுத்தேகம, கொத்மல்புர பகுதியை வசிப்பிடமாக கொண்ட 59 வயதுடைய விவசாயி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பயிர்ச் செய்கை நிலத்தினை காட்டு யானைகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது பயிர்செய்கை நிலத்துக்கு அருகில் வைத்து குறித்த விவசாயியை யானை தாக்கியதில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

வாகனங்களை திருடி வந்த பிரபல கோஷ்டி கைது

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

திட்டமிட்டு வாகனங்களை திருடி வந்த மூவர் அடங்கிய கோஷ்டியொன்றினை 30 கையடக்க தொலைபேசிகள், ஐஸ் போதைப் பொருள் பாவிப்பதற்கு பயன்படுத்தும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களுடன் பின்வத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணைக்குட்படுத்திய போது அவர்களின் வீட்டில் இருந்து 30 கையடக்க தொலைபேசிகள், அப்பில் ஐ பேட், ஆட்டோ வண்டியொன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று, லைட்டர் 120 , ஐஸ் பாவிக்கவென வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட உபகரணங்கள் 12, திருடப்பட்ட நான்கு வாகனங்களின் பதிவு தஸ்தாவேஜுகள், இரண்டு போலி வாகன இலக்க அட்டைகள், பணம் ரூபாய் 5060 என்பவற்றை கண்டு பிடிக்க முடிந்ததாக பின்வத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தம்மிக டீ சில்வா தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 25 வயதுக்கும் 32 வயதுக்கும் இடைப்பட்ட வயதை உடைய பாணந்துறை, வயக்கடை, மாலமுல்லை

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பென பின்வத்தை பொலிஸார் சந்தேகம்

போன்ற இடங்களை சேர்ந்தவர் என்றும் பொலிசார் கூறினர்.

உல்லாசப் பிரயாண ஹோட்டல்களுக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் இவர்கள் இச்சலுகையை செய்து கொடுத்துள்ளதாகவும் வாகனம், கையடக்க தொலைபேசிகள் திருடுவதிலும் இக்கோஷ்டி ஈடுபட்டு வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

இக்கொள்ளை கோஷ்டி பாணந்துறை சுதுவெல்ல வீதியில் ஆட்டோ ஒன்றினை திருடி தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருந்தபோது அயலில் உள்ள வீடொன்றின் சீ சீ ரீ வீ கமராவில் பதிந்திருந்ததை விசாரணை செய்தவேளை இக்கோஷ்டி பற்றி தெரியவந்ததாக பொறுப்பதிகாரி கூறினார்.

அஹதிய்யா இடைநிலை தேசிய சான்றிதழ் பரீட்சை 5ஆம் திகதி

இறக்காமம் தினகரன் நிருபர்

அகில இலங்கை அஹதிய்யாப் பாடசாலைகள் சம்மேளனத்தால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் அஹதிய்யா இடைநிலை தேசிய சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை (5) நாடளாவியரீதியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாட்டிலுள்ள சகல அஹதிய்யாப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளாக அஹதிய்யாப் பரீட்சை ஆணையாளர் அல்ஹாஜ் ஏ.ஆர். எம்.நிஸாம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களும், நேர அட்டவணைகளும் சகல அஹதிய்யாப் பாடசாலை அதிபர்கள் மூலமாக பரீட்சார்த்திகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தற்போது 9ஆம் 10ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் தோற்றும் இப்பரீட்சை பிக்ஹு (இஸ்லாமிய சட்டநெறி), அஹ்லாக் (ஒழுக்கவியல்), ஸீரா (இஸ்லாமிய வரலாறு) ஆகிய மூன்று பாடங்களைக் கொண்டதாகும். மேற்படி பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடைபெறவுள்ளது.

7,8,9ஆம் தர அஹதிய்யா பாடத்திட்டத்திற்கமைய நடைபெறும் இப்பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையை அல்லது தபால் அடையாள அட்டையை அல்லது கடவுச்சீட்டை அல்லது அஹதிய்யா பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவசியம் சமர்ப்பிக்க வேண்டும்.

சனிக்கிழமை காலை 9.00மணி முதல் 11.00மணி வரை பிக்ஹுல் இஸ்லாம் பாடமும், 11.15மணி முதல் 1.15மணி வரை அஹ்லாக் பாடமும், பிற்பகல் 2.00மணி முதல் 4.00மணி சீரா பாடமும் இடம்பெறவுள்ளன.

அரச உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்கம் தொடர்பான பயிற்சி

திறப்பனை தினகரன் நிருபர்

அரச சேவையின் போது அரச உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்கம் மற்றும் நடத்தை குறித்து பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி ஒன்று கடந்த 01 ம் திகதி சிறு வணிகப் பிரிவு உதவிப் பணிப்பாளர் திருமதி ஜி. ஆர். யூ. கே. கமகேயின் தலைமையின் கீழ் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அநுராதபுரம் மாவட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரியும் சிறு தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்கம் மற்றும் நடத்தைசார் பயிற்சிகள் இதன் போது வழங்கப்பட்டன.

இதில் மாவட்டத்தின் 40 க்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். வட மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் டபிள்யூ. எம். யு. எஸ் வீரகொனினால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வின் போது அபிவிருத்தி பயிற்சி அலுவலர் ஆர். டி. யு. என். திருமதி குணவர்தன உட்பட அநுராதபுரம் மாவட்ட சிறு வர்த்தகத் துறை அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

கொழும்பு மாநகர சபை

விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

தொ. இல.	கேள்வி இல.	விபரம்	கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை	மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம்	விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா
1.	CPD10/ 2610/2022	P.D. சிரிசேன விளையாட்டு மைதானம், வீஸ்ட்வைக் சமூக நலன்புரி நிலையம் மற்றும் குணானந்த மாவத்தை சனசமூக நிலையம் என்பவற்றுக்கு Body Building உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்	வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள்	ரூபா 5,750.00	400,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.**
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-11-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 நவம்பர் 23ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.04.21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.03.22ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 நவம்பர் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 நவம்பர் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை (SLPA)

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	விலை மனுப் பிணைத் தொகை (ரூபா)	பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம்	மூடும் திகதி மற்றும் நேரம்
CES/FP/02/ PT/6384(MP)	Steel laminated Bearing Pads for Trolly Rails of ZPMC 41 Ton RTG Cranes	20,000.00	1,000.00	2022.12.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/FP/04/ PT/6406(MP)`	Allison Transmission spares for UD Nissan Prime Movers at JCT	50,000.00	1,000.00	2022.12.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CMS/LP/22/ PT/16/033	230 Nos. G.I. Wire Mesh 2" X2" 3MM (per 12' X 7' Sheets)	29,000.00	1,000.00	2022.11.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/08/027	08 Nos. Television Screen	28,000.00	1,000.00	2022.11.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/09/031	05 Nos. Portable Engine Generators	30,000.00	1,000.00	2022.11.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/03/054	30 Nos. of 250 X 15 Tyres for 3.5T Fort Lift Trucks	27,000.00	1,000.00	2022.11.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/21/ PT/10/063	02 Nos. Rotary Actuator HS 14	28,000.00	1,000.00	2022.11.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/16/057	60 Nos. Sealed type Battery 12V 200 AMPH (Semi – Maint. Free)	40,000.00	1,000.00	2022.11.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/07/054	Spares for after Cooler GP 6N 5960 for the Caterpillar 3306 Engine of the Mooring Launch Mooring 111	55,000.00	1,000.00	2022.11.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/16/059	02 Nos. MS Plates LR Grade "A" (6000MM X 1500MM X 10MM)	20,000.00	1,000.00	2022.11.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/13/26	Plywood Sheets 8' X 4' (3/4') – 200 Nos.	19,500.00	1,000.00	2022.11.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/22/ PT/13/57	MS Chequred Plate, MS Plate & MS Flat Iron	60,000.00	1,000.00	2022.11.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு

2. மொத்த ஆகுசெலவு 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

3. ஆகக் குறைந்தது கடந்த ஐந்து 5 வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2022 நவம்பர் 04 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மூடும் நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,
கொழும்பு-01.

தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024. 2482638.
தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

USA, CA 92841, Garden Grove, APT 2Q, Beach Blvd, 12221ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே சூலா தமயந்தி பீரிஸ்** எனப்படும் **சூலா இத்தபான பிரிஸ்** (USA கடவுச் சீட்டு இல. A07444767 கொண்ட) நான் பாணந்துறை, வலன வீதி, இல. 20ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இன் பெயரில் என்னால் வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு **S.L. வீரசேக்கரவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002 ஒக்டோபர் 19ம் திகதிய அற்றோணி தத்துவ இலக்கம் 6343ஐ 2022 ஒக்டோபர் 01ம் திகதி முதல் அமுலாகுமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். என் பெயரில் அல்லது என் சார்பாக சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இனால் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பிறகு நான் பொறுப்பாகமாட்டேன்.

சூலா இத்தபான பிரிஸ்,
முதன்மையாளர்.
28 செப்டெம்பர் 2022

பிழைதிருத்தம்

பெறுகை அறிவித்தல்

நாவலப்பிட்டி நகரசபை

நாவலப்பிட்டி நகரசபைக்கு உரித்தான பின்வரும் இலக்கம் 01,02,03,04 எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் 2023.01.01 முதல் 2023.12.31 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்.....

மேற்படி தலைப்பில் கடந்த 2022.10.14ம் திகதி தினகரன் பத்திரிகையில் 14ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் அட்டவணையில் தொடர் இல 03 நிரல் 04 இல் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத்தொகை ரூபா.10,000.00 எனத் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயத்தில் மாற்றங்கள் இல்லை

தலைவர்
நாவலப்பிட்டி நகர சபை

உக்குவளை பிரதேச சபை

2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல் மற்றும் சேவைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக தம்மாலேயே சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பத்தில் பெயர். முகவரி, வியாபாரத்தின் தன்மையைக் குறிப்பிட்டு பதிவுச் சான்றிதழுடன் ஏனைய விபரங்களை உள்ளடக்கி பதிவுக் கட்டணத்துடன் எனக்கு அனுப்புதல் வேண்டும். காசோலை மற்றும் காசுக் கட்டளையை "செயலாளர், உக்குவளை பிரதேச சபை" என எழுதி அனுப்புதல் வேண்டும். பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் 2022-12-31ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தொடர் இலக்கம்	வழங்கல் மற்றும் சேவைகள்	பதிவுக் கட்டணம் ரூபா
	அலுவலக உபகரணங்கள் வழங்குதல்	
01	அலுவலக உபகரணங்கள் (மரம், உருக்கு, பிளாஸ்டிக்)	ரூபா. 1500.00
02	கணனி, கணனி அச்சுப்பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ஸ்கேனர் இயந்திரம் வழங்குதல்	ரூபா. 1500.00
03	நேரப் பதிவு இயந்திரம், (விரல் ரேகை பதிவு இயந்திரம்)	ரூபா. 1500.00
04	கெமரா, புரொஜெக்டர், மற்றும் வீடியோ உபகரணங்கள்	ரூபா. 1500.00
05	அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகள் (புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி ரோணியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம்)	ரூபா. 1500.00
06	கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களை வழங்குதல்	ரூபா. 1500.00
	அலுவலக பாவனைப் பொருட்களை வழங்குதல்	
